



விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 36 வள்ளுவ ஆண்டு 2055
கார்த்திகை மாதம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (26.11.2024)



# கிழக்கு நோக்கி நகரும் தாழமுக்கம் கரையோர பிரதேசங்களில் பதற்றம்

## வடக்கு, கிழக்கு உட்பட நாடெங்கும் கனத்த மழை ; வெள்ள அபாயம்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் இம்மாதம் 28ஆம் திகதி வரை ஆறுகளில் வெள்ளம் ஏற்படலாம் என நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக அதிக மழைவீழ்ச்சி கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதனால் அனைவரும் வெள்ள இடருக்குரிய முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு இடர் முகாமைத்துவ நிலையம் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடா பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு (தொடர்ச்சி..)

02

**சிவப்பு எச்சரிக்கை; வதந்திகள் வேண்டாம்**

# வடக்கு - கிழக்கில் நாளை மாவீரர் நாள்

## கொட்டும் மழையிலும் உணர்வெழுச்சியுடன் ஏற்பாடு

(கி.வசந்தன்)

வடக்கு - கிழக்கு பகுதிகளில் நாளை உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நிகழ்வினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் மழைக்கு மத்தியிலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் மரணணித்த உறவுகளுக்காக வருடாந்தம் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. நவம்பர் 21 முதல் மாவீரர் வாரம் ஆரம்பிக்கப்பட்டு நவம்பர் 27 துயிலும் இல்லங்களில் மாலை 6.05க்கு இடம்பெறும் சுடர் ஏற்றும் நிகழ்வுடன் நிறைவு பெறும்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு - கிழக்கில் (தொடர்ச்சி...)

02



## பொலிஸ், இராணுவத்தினருக்கு பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தல்

### சட்டத்தை மீறினால் கைது

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றும், நாளையும் இடம்பெற உள்ள மாவீரர் தின நிகழ்வுகள் மற்றும் யுத்தத்தில் உயிர்த்தவர்களின் உறவினர்கள் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுகளை முழுமையாக கண்காணிக்க இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் பாதுகாப்பு அமைச்சால் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவுக்கூரும் வகையில் இன்றும், நாளையும் வடக்கு மாகாணத்தில் பல்வேறு நிழக்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதில் உயிர் நீத்தவர்களின் (தொடர்ச்சி.)

02

## உயிரிழந்தோரை நினைவுகூரும் உரிமை உறவினருக்கு உண்டு!

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



நவம்பர் 27ஆம் திகதி அனுசரிக்கப்படும் மாவீரர் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் சின்னங்கள், சீருடைகள் அல்லது படங்களைப் பயன்படுத்தி நிகழ்வுகளை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கல்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற (தொடர்ச்சி.)

02

## ஈ.பி.டி.பியிலிருந்து விலகுவதாக திலீபன் அறிவிப்பு

(கி.வசந்தன்)



முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா நிர்வாக செயலாளருமான குலசிங்கம் திலீபன் கட்சியிலிருந்தும் அதன் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் வெளியேறுவதாக நேற்று அறிவித்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் மேலும் (தொடாச்சி)

02

## மு. காவிலிருந்து ஹரீஸ் இடைநிறுத்தம்



திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸ் அக்கட்சியின் உயர்பீட உறுப்புரிமையிலிருந்து உடனடியாக இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் அறிவுறுத்தலின் (தொடாச்சி)

02

## மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற பாராளுமன்ற முறைமை முக்கியம்

### சபாநாயகர்



மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்குப் நாடாளுமன்ற முறைமை முக்கியமானது என சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தெரிவித்தார். பத்தாவது நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட திசை முகப்படுத்தல் (தொடர்ச்சி...)

02

## 43 கிராமங்கள் மன்னாரில் பாதிப்பு

(வாஸ் கூஞ்ஞ)



மன்னார் நகரப் பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் 43 கிராமங்களைச் சேர்ந்த 43623 பேர் கனமழை காரணமாக பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். மன்னாரில் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக (தொடர்ச்சி...)

02

## தீர்வுத்திட்டம் குறித்து பேச தமிழ் கட்சிகளுக்கு கஜேந்திரகுமார் அழைப்பு!



( கி.வசந்தன் )

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட முன்மொழிவை அடிப்படையாக வைத்து ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (தொடர்ச்சி...)

02

## அதானியின் இலங்கை திட்டம்: நோட்டம் விடும் அமெரிக்க நிறுவனம்

இலங்கையில் அதானி குழுமத்தின் ஆதரவுடன் செயல்படும் கொழும்பு துறைமுக அபிவிருத்திக்கு 500 மில்லியன் டொல



ருக்கும் அதிகமான கடனுதவி வழங்க ஒப்புக்கொண்ட அமெரிக்க நிறுவனம், குறித்த திட்டத்தில் (தொடர்ச்சி...)

02

## அஷாத் மௌலானாவை நாடு கடத்த அரசாங்கம் கோரிக்கை

(கனுஷியா புஷ்பகுமார்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளியிடப்பட்ட சனல்-4 காணொளியில் பல சாட்சியங்களை வெளிப்படுத்தியிருந்த அஷாத் மௌலானாவை நாடு கடத்துமாறு இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கும் முன்னாள் (தொடர்ச்சி...)

02

## கொழும்பில் இரு குழுக்கள் மோதல் : 17 வயது சிறுவன் அடித்துக் கொலை

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருகொடவத்தை பிரதேசத்தில் 17 வயது சிறுவன் ஒருவன் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளான்.

குறித்த பிரதேசத்தில் இரு தரப்பினர்களுக்கிடையில் ஏற் பட்ட தகராறில் வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த அச்சிறுவன் பல த்த காயமடைந்த (தொடர்ச்சி...)

02



ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை கரோலினா தோட்ட பகுதியில் நேற்று (25) அதிவேகமாக பயணித்த தனியார் பஸ் ஒன்று எதிர்த்திசையில் வந்த இ.போ.ச பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது.இதில் தனியார் பஸ்ஸின் பின் பகுதி உடைந்து வேறாக துண்டிக்கப்பட்டது.

மனிதத்தின் குரலாக - உங்களில் ஒருவனாக : ஒருவன்

## கிழக்கு நோக்கி....

மண்டலம் தாழமுக்கமாக வலுவடையக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது மேலும் வலுவடைந்து இலங்கையின் கிழக்கு கரையைக் கடந்து வட மாகாணத்தை ஊடறுத்து தமிழகத்தை நோக்கி நகரலாம்.

இதன் காரணமாகக் கிழக்கு மாகாணத்தின் சில இடங்களில் 150 மில்லிமீற்றர் வரையான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டில் தற்சயமம் நிலவும் சீரற்ற காலநிலையால் காலி, மாத்தறை, கேகாலை, பதுளை, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய ஆறு மாவட்டங்களின்; 17 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் கேட்டுக் கொண்டுள்ளது. நாட்டில் தற்சமயம் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையினால் இம்மாதம் 28ஆம் திகதி வரை ஆறுகளில் வெள்ள நிலைமை ஏற்படலாம் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கனகராயன் ஆறு, பறங்கியாறு, முந்தானை ஆறு, மல்வத்து ஓயா, கலா ஓயா, மா ஓயா, யான் ஓயா, மாதுறு ஓயா, கல் ஓயா, ஹெட்ட ஓயா, பிரி ஓயா, மகாவலி கங்கை ஆகிய ஆற்றுப் பகுதிகளின் அருகில் உள்ள இடங்களில் வெள்ளம் ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சீரற்ற காலநிலையின் அவசர நிலைமையிலும் உயர்தரப் பரீட்சையை சிக்கலின்றி நடத்துவதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நாடாளவிய ரீதியில் திங்களன்று (25) ஆரம்பமாகிய உயர்தரப் பரீட்சைகள் டிசம்பர் மாதம் 20ஆம் திகதி முடிவடையும். பரீட்சை முடிவடையும் வரை பரீட்சைகளை தங்கு தடையின்றி நடத்தி முடிப்பதற்கு இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர்களோடு உரிய விதத்தில் தொடர்புகள் பேணப்படவிருப்பதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கிழக்கில் கல்முனை உள்ளிட்ட கரையோரப் பிரதேசங்களில் சூறாவளி ஏற்படும் என்ற வகையில் பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் என மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையங்களின் உதவிப் பணிப்பாளர்களான ஏ.எம்.எஸ். சியாத் மற்றும் எம்.ஏ.சி.எம். றியாஸ் ஆகியோர் அறிக்கையொன்றின் ஊடாக பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சூறாவளி உருவாகி கல்முனையைத் தாக்கும் என்ற வகையில் பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் எனவும் மேலும், சூறாவளி ஒன்று உருவாகும் பட்சத்தில் மக்களுக்கு அது தொடர்பில் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் ஊடாக உடனடியாக அறிவிக்கப்படும் என்பதனை மிகவும் பொறுப்புடன் அறியத்தருகின்றோம்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கடந்த 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி கிழக்கில் சூறாவளி ஏற்பட்டு இவ்வாண்டுடன் 46 வருடங்கள் கழிந்துள்ளதை பலர் இப்பொழுதும் நினைவில் வைத்து மீட்டிப் பார்த்து இளையவர்களுக்கு தங்களது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

## கொழும்பில்...

நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.இத் தகராறில் காயமடைந்த மற்றொரு சிறுவனும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மு.கா.விலிருந்து...

பேரில் கட்சியின் செயலாளர் நாயகம் சட்டமுதுமாணி

நிசாம் காரியப்பர் இது தொடர்பான இடை நிறுத்த கடிதத்தை ஹரீஸுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தன்னிலை விளக்கத்தை அவர் ஒருவார காலத்துக்குள் வழங்காவிட்டால் நிரந்தரமாக நீக்கப்படுவார் என்றும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீர்வுத்திட்டம்....

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்துள்ளது. அத்தேர்தலின் முடிவுகளை நாம் பார்க்கின்ற போது, தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அவர்கள் அடுத்து வரும் காலப்பகுதியில் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை ஆரம்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்தத் தருணத்தில் அவர்கள் ஏற்கனவே மைத்திரி – ரணில், கூட்டாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒற்றையாட்சியை மையப்படுத்திய புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

குறித்த இடைக்கால அறிக்கையானது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை. அது ஒற்றையாட்சியை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ள ஒன்றாகும். ஆகவே குறித்த இடைக்கால அறிக்கையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுவதன் காரணமாக அவர்கள் எந்தவிதமான முடிவுகளுக்கும் செல்ல முடியும். ஆனால் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாகவே அவர்கள் செயற்படுகின்றார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அதற்காக, தமிழ் மக்களின் அபிலாஷை களைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தயாரிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுக்கான வரைவினை அடிப்படையாக வைத்து ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

குறித்த வரைவு தயாரிக்கப்பட்ட போது சுமந்திரன் தவிர ஏனைய கட்சிகள் அனைத்துப் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தார்கள். துரதிர்ஷ்டவசமாக தொடர்ச்சியாக அவர்களின் பங்கேற்பு முழுமை பெறும் வரையில் நீடித்திருக்கவில்லை.

எவ்வாறாயினும்,கொள்கை அளவில் அனைவரும் தமிழ் மக்கள் பேரவையின் வரைவினை ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் அதனை மையப்படுத்தி பேச்சுக்களை ஆரம்பிப்பது பொருத்தமானதாக இருக்கும். இந்தச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கும் ஏனையவர்கள் அதில் பங்கேற்பதற்குமான பகிரங்க அறிவிப்பை நாம் விடுக்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ், இராணுவம்...

உறவினர்கள் மற்றும் வடக்கின் அரசியல் தலைவர்களும் கலந்துகொள்ள உள்ளனர். அதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் சில நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகளை முழுமையாக கண்காணிப்பதற்கான ஆலோசனைகளை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, பொலிஸாருக்கு வழங்கியுள்ளார். அதேபோன்று பாதுகாப்பு அமைச்சின் சார்ப்பில் இராணுவத்தினருக்கு கண்காணிப்பதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், " உயிரிழந்த உறவினர்களை எவருக்கும் சட்டப்படி நினைவுகூர முடியும். ஆனால், புலிகளின் சின்னத்தையோ சீருடைகளையோ அவர்களின் படங்களையோ பயன்படுத்தி மாவீரர்களை கொண்டாடுவதற்கு இடமில்லை. நாட்டில் சட்டம் உள்ளது. சட்டத்தின் படி புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பு. என்றாலும், வடக்கு, கிழக்கு, தெற்கு அல்லது மலைப் பகுதி என எதுவாக இருந்தாலும், உங்கள் உறவினர், பிள்ளைகள் எவரும் உயிரிழந்திருந்தால் அவர்களை நினைவுகூர அனைவருக்கும் உரிமை உண்டு." எனக் கூறியுள்ளார்.

இதனால் இரண்டு தினங்களிலும் அனுஷ்டிக்கப்படும் நிகழ்வுகளையும், நிகழ்வில் கலந்துகொள்பவர்களது செயல்பாடுகளையும் கண்காணிப்பதற்காக பாதுகாப்புப் படையினரை விழிப்புடன் வைத்திருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. சட்டவிரோதமான முறையில் பயங்கரவாத அமைப்பை அல்லது பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் நினைவுகூரும் எந்தவொரு நபரையும் கைது செய்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கில் பல பகுதிகளில் மயானங்களில் இடம்பெறும் துப்புரவு நடவடிக்கை குறித்து வடக்கு பாதுகாப்பு தரப்பினர் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் உரிய நபர்களிடம் வாக்குமூலங்களைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.நாளை நவம்பர் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நிகழ்வுகளை அனுஷ்டிக்க வடக்கு, கிழக்கில் உள்ள சில சிவில் அமைப்புகளும், சர்வதேச ரீதியில் இயங்கும் தமிழ் அமைப்புகளும் அழைப்பு விடுத்துள்ளன.

உயிரிழந்தவர்கள் ஒவ்வொரதும் வீட்டிலும் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. என்றாலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக உயிரிழந்தவர்களை அனுஷ்டிக்கும் நிகழ்வுகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 43 கிராமங்கள்...

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரில் பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்டு வரும் அனர்த்தங்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் திங்கள் கிழமை (25) மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் அவசரக்கூட்டம் அனைத்து திணைக்கள அதிகாரிகளுடன் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்

மன்னாரில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக மன்னார் நகரம் மற்றும் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுகளில் பெரும்பாலான மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

மன்னார் நகரப் பிரதேசப் பிரிவில் 43 கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிப்படைந்துள்ளன. 12469 குடும்பங்களைச் சார்ந்த 43623 பேர் இந்த வெள்ளத்தினால் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு நானாட்டான் பிரதேசப் பிரிவில் மூன்று கிராம அலுவலகப் பிரிவுகள் இந்த வெள்ளத்தினால் பாதிப்படைந்துள்ளன. இதில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதுவரை மன்னார் மாவட்டத்தில் 14 பாதுகாப்பு மையங்கள் உருவாக்கப்பட்டு 367 குடும்பங்களைச் சேர்ந்த 1248 பேர் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு முதலிய உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் தொடர் மழையிலும் வெள்ளப் பெருக்கு ஏற்படாதிருக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் மன்னார் நானாட்டான் பகுதியில் 16க்கு மேற்பட்ட ஜேபிசி வாகனங்கள் மூலம் வெள்ளநீர் கடலுக்குள் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட தற்பொழுது செங்கால் குறைந்த தாழமுக்கம் இன்மையால் மன்னார் மாவட்டமும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலைமை இருப்பதனால் இங்குள்ள அனைத்து திணைக்களங்களையும் அழைத்து செங்கால் தாழமுக்க நிலைமையை எவ்வாறு எதிர்கொள்வது என கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைவாக குறிப்பிட்ட நிலையிலிருந்து பாதிப்படையும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவது மற்றும் கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை வெள்ளப் பெருக்கிலிருந்து பாதுகாத்து அவர்களை தகுந்த முறையில் பரீட்சையில் தோற்றுவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் தற்பொழுது உள்ள குறைந்த காற்றமுத்த நிலைமையை கருத்தில் கொண்டு மன்னார் மாவட்ட மீனவர்களை கடற்தொழிலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தலும் வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய காலநிலை மாற்றம் காரணமாக 400 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. மன்னார் மாவட்டத்தில் சராசரியாகக் கிடைக்கும் மழைவீழ்ச்சியில் மூன்றிலொரு பங்களவான மழை வீழ்ச்சி இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு கிடைக்கும்போது இது மன்னார் மாவட்டத்தில் பெரும் வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதை தடுப்தற்குரிய சகல எற்பாடுகளையும் முப்படையினரும் பொலிசாரும் மற்றும் இதனுடன் தொடர்புள்ள திணைக்களங்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்பொழுது மன்னார் மாவட்டம் இந்த வெள்ளப் பெருக்கினை கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது எனவும் தெரிவித்தார்.

## வடக்கு...

பாதுகாப்பு தரப்பினரின் அச்சுறுத்தல் காரணமாக பல்வேறு அசௌகரியங்களுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. ஆனால், இம்முறை ஆட்சி மாற்றத்தின் பின் வடக்கு – கிழக்கு பகுதியில் மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்கப் பாதுகாப்பு தரப்பால் இடையூறுகள் ஏற்படுத்தப்படவில்லை.

இறந்தவர்களை நினைவுகூர அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக வடக்கு – கிழக்கில் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சில நாட்களாக உணர்வெழுச்சியுடன் இடம்பெற்று வருகின்றன. இதில் மாவீரர்களின் உருவப்படங்களும் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கண்ணீர் மல்க நினைவேந்தல்களில் ஈடுபட்டனர்.

இறுதி நிகழ்வுக்காக மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்புரவு செய்யப்பட்டு சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில், அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு உடும்பன்குளம் மாவீரர் துயிலுமில்லம், மட்டக்களப்பு மாவட்டத்தில் தரவை மாவீரர் துயிலுமில்லம், தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம், கண்டலடி மாவீரர் துயிலுமில்லம், மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லம், திருகோணமலை மாவட்டத்தில் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், தியாகவனம் மாவீரர் துயிலுமில்லம், பெரியகுளம் மாவீரர் துயிலுமில்லம், உப்பாறு மாவீரர் துயிலுமில்லம், மணலாறு மாவட்டத்தில் கோடாலிக்கல் மாவீரர் துயிலுமில்லம், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லம் அருகாமை, மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம், பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம், முள்ளிக்குளம் மாவீரர் துயிலுமில்லம், முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம், விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லம், அளம்பில் மாவீரர் துயிலுமில்லம், ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம், கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம், யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், சாட்டி மாவீரர் துயிலுமில்லம், எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் என்பவற்றில் உணர்வுபூர்வமான அஞ்சலி நிகழ்வுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

## மக்களின்...

செயலமர்வை நேற்று (25) ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே சபாநயாகர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் பல்வேறு கட்சிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள் ஊடாக மக்களுக்கு சேவையை செய்வதற்கு நாடாளுமன்ற பாரம்பரியம், அரசியலமைப்பு, நாடாளுமன்ற நிலையியற் கட்டளை போன்றவை குறித்து நல்ல புரிதலும், அறிவும் அவசியம் என்பதால் இவ்வாறான செயலமர்வை ஏற்பாடு செய்வது மிகவும் அவசியமானது எனக் குறிப்பிட்ட சபாநாயகர், இதனை ஏற்பாடு செய்த நாடாளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட செயலகத்தின் பணியாளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

செயலமர்வின் முதலாவது நாளான இன்று 168 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். புதிய பாராளுமன்றம் ஆரம்பிக்கப்படும்போது சம்பிரதாயபூர்வமாக மேற்கொள்ளப்படும் செயற்பாடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் செயலமர்வு இன்று(26) மற்றும் நாளை (27) ஆகிய தினங்களிலும் தொடரவுள்ளது.

## அதானியின்...

உரிய கவனம் செலுத்தி வருவதாகக் கூறியுள்ளது.

அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி மற்றும் நிறுவனத்தின் பிற உயர்மட்ட நிர்வாகிகளுக்கு எதிரான இலஞ்சக் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

யுஎஸ் இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் என்ற குறித்த அமெரிக்க நிறுவனம், கடன் தொடர்பான இறுதி உடன்பாட்டை எட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் ஓரளவுக்கு அதானி குழுமத்துக்குச் சொந்தமானது.

எந்தவொரு கடன் வழங்குதலும் செய்யப்படுவதற்கு முன்னர் திட்டத்தின் அனைத்து அம்சங்களும் எங்களின் கடுமையான தரநிலைகளை பூர்த்தி செய்வதை உறுதிசெய்ய நாங்கள் தொடர்ந்து கவனமாக இருக்கிறோம் என்று நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். அதானி துறைமுகம் மற்றும் ஸ்பெஷல் எகனாமிக் ஜோன் (APSEZ) லிமிடெட் மூலம் அபிவிருத்தி செய்யப்படும் இலங்கையின் தலைநகரில் உள்ள துறைமுக முனையத்திற்கு நிதியுதவி வழங்குவதாக கடந்த ஆண்டு நிறுவனம் அறிவித்தது. இது ஆசியாவில் அமெரிக்க நிறுவனத்தின் மிகப்பெரிய உள்கட்டமைப்பு முதலீடாகும்.

அமெரிக்க வழக்கறிஞர்கள் கடந்த வாரம் கௌதம் அதானி மற்றும் பிற பிரதிவாதிகள் மீது இந்திய சூரிய ஆற்றல் ஒப்பந்தங்களை பெற 250 மில்லியன் டொலர் லஞ்சம் வழங்கும் திட்டத்திற்கு உதவியதாக குற்றம்சாட்டினர்.

அதானி நிறுவனம் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது அத்துடன் சட்டப்பூர்வ உதவியை நாடுவதாகவும் தெரிவித்துள்ளது.

இதன் பின்னணியில், அதானி குழுமத்தின் நாட்டில் திட்டமிடப்பட்டுள்ள காற்றாலை மின் திட்டங்களை இலங்கை மீளாய்வு செய்து வருவதாகவும், அமைச்சரவை எதிர்வரும் வாரங்களில் இந்த முன்மொழிவை விவாதிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இலங்கை மின்சார சபையின் பேச்சாளரை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

அரசாங்கம் தற்போது திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் மதிப்பீடு செய்து வருகிறது.

## ஈ.பி.டி.பி.யிலிருந்து...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆரம்பத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் (தமிழரசுக் கட்சியில்) எனது அரசியல் பணியை ஆரம்பித்து, பின்பு, 2013ம் ஆண்டிலிருந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) உடன் இணைந்து கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகச் செயலாளராக பொறுப்பேற்று மக்கள் பணியாற்றினேன். மேலும், 2020இல் பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவாகினேன்.

தற்போது நடைபெற்ற 2024 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளே கிடைக்கப்பெற்றன.

இதுவரை காலமும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் பயணித்து மக்கள் சேவையாற்றினேன். சில விடயங்கள் காரணமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிலிருந்து விலகுகிறேன். இது தொடர்பான கடிதத்தினை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பதிவுத் தபாலில் அனுப்பியுள்ளேன்.

இக் கட்சியிலிருந்து நான் வெளியேறுவதற்கு, கட்சியோ அல்லது கட்சியின் தலைமையோ காரணமில்லை, எனது தனிப்பட்ட முடிவு என்பதை தெரிவித்துள்ளேன், எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உயிரிழந்தோரை...

நிகழ்வொன்றின் போது ஊடகவியலாள ர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் விஜேபால, நாட்டின் சட்டத்தின் பிரகாரம் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப் பாகும் என தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவினர்களை வடக்கில் பொதுமக்கள் நினைவு கூருவதை அரசாங் கம் தடுக்கவில்லை. எவ்வாறாயினும், நினைவேந்தல்களை நடத்தும்போது சட்டங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவர்கள் அவ்வாறு செய்ய வேண்டும் என்றும், இறந்த தங்கள் குடும்ப உறுப்பினர்களை நினைவுகூர அவர்களுக்கு உரிமை உண்டு என்றும் அவர் கூறினார்.

# அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்புகளை வலுப்படுத்துவது மட்டும் போதாது



அனர்த்த முகாமைத்துவத்தில் நிறுவன கட்டமைப்புகளை வலுப்படுத்துவது மட்டும் போதாது எனவும், தீர்வுகளை அடி மட்டத்திற்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்களை பலப்படுத்தி அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களில் ஏற்படும் அனர்த்தங்களை தடுப்பதற்கு புதிய தீர்வுகள் வழங்க வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர பதவியேற்பு நிகழ்வில் நேற்று (25) இணைந்து கொண்ட போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டே அனர்த்த முகாமைத்துவ சட்ட முறைமைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அவ்வாறு பணியாற்றும் எந்தவொரு அதிகாரிக்காகவும் முன்னிற்பேன் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார். அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் அரச ஊழியர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். அனர்த்த முகாமைத்துவத்திற்காக அரசாங்கம் அதிகளவு செலவிடுவதாகவும் , சட்டங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்த செலவைக் குறைக்க முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வைஸ் எயார் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துய்யகொந்தா, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, பாதுகாப்பு பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்திகை மாதம் 11ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்:** ஆரோக்கியம் நன்றாகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

**ரிஷபம்:** எல்லையில்லாத சக்தியும் மகிழ்ச்சியும் உங்களை தொற்றிக் கொள்ளும்

**மிதுனம்:** அழைக்கப்படாத எந்த விருந்தினரும் இன்று வீட்டிற்கு வரலாம்

**கடகம்:** நீங்கள் அதிகம் கஷ்டப்படாமல் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்க பொருத்தமான நாள்.

**சிம்மம்:** இன்று உங்கள் சீனியர் உங்கள் வேலையின் தரத்தில் மகிழக்கூடும்.

**கன்னி:** விரைவாக பணம் சம்பாதிக்கும் ஆசை இருக்கும்.

**துலாம்:** தியானமும் யோகாவும் மற்றும் உடல்சார்ந்த ஆதாயங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

**விருட்சிகம்:** உங்களுக்கு நல்ல நேரம் காத்திருப்பதால் உற்சாகமாக இருங்கள்.

**தனுசு:** இன்று நீங்கள் எந்த உதவியும் இல்லாமல் பணம் சம்பாதிக்க முடியும்.

**மகரம்:** உங்களுக்கு நல்ல நேரம் காத்திருப்பதால் உற்சாகமாக இருங்கள்.

**கும்பம்:** ஊகங்கள் அல்லது எதிர்பாராத லாபங்களால் நிதி நிலைமை மேம்படு.

**மீனம்:** வேலைகளை சரியான நேரத்தில் முடித்து தொழில் ரீதியாக நல்ல லாபம் பெறுவீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** தசமி திதி அதிகாலை 03:17 AM அதன் பிறகு ஏகதேசி திதி.
**நட்சத்திரம்:** உத்திரம் நட்சத்திரம் அதிகாலை 04:01 AM அதன் பிறகு அஸ்தம் நட்சத்திரம்.
**யோகம்:** சித்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** சதயம், பூரட்டாதி.
**இராகு காலம்:** மதியம் 03:00 PM முதல் 04:30 PM வரை,
**குளிகை:** மதியம் 12:00 PM முதல் 01:30 PM வரை,
**எமகண்டம்:** காலை 09:00 AM முதல் 10:30 AM வரை,01:30 PM வரை.

# கிழக்கு மாகாண ஆளுநர் மட்டு. செயலகம் விஜயம்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)



மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர நேற்று (25) தனது உயர் மட்ட அதிகாரிகளுடன் விஜயம் செய்து மாவட்டச் செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஈடுபட்டார்.

மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜுலேகாவின் ஒருங்கிணைப்பில் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில், மாவட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப் பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாக ஆளுநர் தெளிவுபடுத்தினார். மேலும், அங்கு கருத்துத் தெரிவித்த ஆளுநர், இன மத பேதமின்றி நாம் இலங்கையர் எனும் அடிப்படையில் ஊழலற்ற தூய்மையான சேவையை மக்களுக்கு வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார் இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.பி மதநாயக்க, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், உயரதிகாரிகள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

# இரு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள்





ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இரு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்களை நியமித்துள்ளார். இது தொடர்பான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று(25) ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. இதன்படி, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி அயேஷா ஜினசேன நியமிக்கப்பட்டுள்ளார். கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளராக மலர்மதி கங்காதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

# மிஸ்டர் வேல்ட் 2024 மகுடத்தை சூடிய இலங்கையர்



வியட்நாமில் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான மிஸ்டர் வேர்ல்ட் 2024 போட்டியில் இலங்கையின் மேக்கா சூரியராச்சி மக்கள் தேர்வு விருதை வென்றுள்ளார். இலங்கையின் கலாசாரத்தை பெருமை மற்றும் நேர்த்தியுடன் வெளிப்படுத்தும் "தேசிய ஆடை மக்கள் தெரிவு" விருதையும் அவர் பெற்றார். இந்தநிலையில், மிஸ்டர் வேர்ல்ட் போட்டியில் முதல் 10 இடங்களை எட்டிய முதல் இலங்கையர் என்ற வரலாற்றையும் மேக்கா சூரியராச்சி படைத்துள்ளார். மேகா சூரியராச்சி புகழ்பெற்ற வைத்தியரும் வடிவமைப்பாளருமான டொக்டர் கபில சூரியராச்சியின் மூத்த மகனாவார்.

## வெள்ளத்தில் தத்தளிக்கும் மன்னார்:

# போராட்டத்தில் குதித்த வசந்தபுரம் மக்கள்



மன்னார் பேசாலைக்கு அருகாமையிலுள்ள வசந்தபுரம் குக்கிராமம் வெள்ளத்தில் மூழ்கியபோதும் எவரும் தம்மை கவனிக்கவில்லையெனத் தெரிவித்து மன்னார்–தலைமன்னார் பிரதான வீதியை மறித்து அக்கிராம மக்கள் நேற்று (25) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மன்னாரில் பெரும் பகுதி வெள்ளத்தில் மூழ்கி காணப்படுவதுடன் பலர் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் தங்கள் உறவினர்கள் வீடுகளுக்கும் இடம்பெயர்ந்து தங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எனினும் மன்னார் நகர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வசந்தபுரம் என்னும் ஒரு குக்கிராமமும் முற்றாக மழை வெள்ளத்தால் மூழ்கிக் காணப்படுகின்றபோதும் இவர்கள் அருகில் எங்கும் இடம்பெயர்ந்து போக முடியாத நிலையிலிருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தங்களின் நிலைமையை எவரும் நேரடியாக வந்து பார்த்து கவனிக்கவில்லையெனத் தெரிவித்து இக்கிராம மக்கள் மன்னார்–தலைமன்னார் பிரதான வீதியை மறித்து தங்கள் நிலையை யாவரும் நோக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருந்தனர். இதனால் இப்பாதையினூடாக போக்குவரத்துக்கள் ஒரு சில மணி நேரம் தடைப்பட்டதுடன் பிரயாணிகளும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். தலைமன்னார் பொலிஸார் இப்பகுதிக்கு வந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் போக்குவரத்தும் சீர் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீபன் சம்பந்தப்பட்ட இடத்துக்கு வருகை தந்து ஒரு பாதுகாப்பான இடத்தில் இம்மக்கள் தங்குவதற்கு கொட்டில்கள் அமைத்து தங்க வைக்கவும் உடனடியாக சமைத்த உணவு வழங்கவும் குடிநீர் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் உடன் செய்து கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்த வசந்தபுரம் கிராம மக்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு பகுதியிலிருந்து யுத்தக்காலத்தில் மன்னாருக்கு இடம்பெயர்ந்து பேசாலையில் அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டு பின் 2008 ஆம் ஆண்டு இக்கிராமத்தில் குடியேற்றப்பட்டவர்கள்.

இங்கு 60 குடும்பங்களைச் சார்ந்த 150 பேர் வசிப்பதாகவும் 4 வீடுகள் மட்டுமே கல் வீடாகவும் ஏனையவை கொட்டில்களாகவும் காணப்படுவதுடன் எந்த பொது மண்டபமோ அடிப்படை வசதிகளோ அற்ற கிராமமாகவே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சர்வதேச நீதியை கோரி லண்டனில் திரண்ட தமிழர்கள்

## புதிய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்தல்





மாவீரர் வாரத்தை முன்னிட்டு தேசியக் கொடி நாள் லண்டனில் (trafalgar square) ஆயிரக்கணக்கானோரின் பங்குபற்றுதலுடன் உணர்வுப்பூர்வமாக இடம்பெற்றது. புலம்பெயர் தமிழர்கள் ஒவ்வொரு ஆண்டு தமது நாடுகளில் தேசிய கொடிநாள் நிகழ்வை அனுஷ்டித்து வருகின்றனர். இந்த தினத்தில் இறுதி யுத்தம் மற்றும் போர் காலத்தில் இலங்கையில் உயிர்நீத்த தமிழ் மக்களையும் நினைவுகூர்ந்து வருகின்றனர். அதன் பிரகாரம் இம்முறையும் தேசிய கொடி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை லண்டனில் உணர்வுப்பூர்வமாக இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட தமிழ் மக்கள், இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பில் நீதியான விசாரணை அவசியம் என வலியுறுத்தியதுடன், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி சர்வதேச தலையீட்டுடன் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# மாவீரர் நாளும் சுயமரியாதையும்

இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கில் 36 ஆண்டுகளாக நீடித்த இன நெருக்கடியினால் இலங்கை இராணுவத்துடன் போரிட்டு உயிர் நீத்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் வாரம் சென்ற 21 ஆம் திகதி வியாழக்கிழமையில் இருந்து அனுட்டிக்கப்படு வருகிறது. நாளை 27 ஆம் திகதி அதன் இறுதி நாள்.

ஒரு தேசிய இனத்தின் சுயமரியாதை என்பது சுயநிர்ணய உரிமைக்கு அமைவானது. ஆகவே மாவீரர் நாள் என்பது வெறுமனே போரில் உயிர்நீத்தவர்களை மாத்திரம் நினைவு கூரும் நாள் அல்ல என்பது இங்கு தெளிவாகிறது.

இலங்கையில் மாத்திரமன்றி இந்தியா மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களால் மாவீரர் நாள் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் அனுட்டிக்கப்பட்டு வருகிறது.

2009 இற்குப் பின்னரான சூழலில் இந்த நினைவேந்தல் நிகழ்வை அனுஷ்டிக்க வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் ஏதோவொரு காரணத்தை மையப்படுத்தித் தடை விதித்திருந்தன.

மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு செல்லும் அனைத்து வீதிகளும் மூடப்பட்டிப்பது வழமை . ஆனால் இம்முறை பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கம் எனவும் மாவீரர் நினைவேந்தல் நாளை அனுஷ்டித்தால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் விளக்கம் கூறி அரசாங்கம் மறுப்பு தெரிவித்திருந்தது.

சொந்த வீடுகளில், ஆலயங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டால் கூட கைது செய்யப்பட்ட வரலாறுகள் உண்டு. பல மாவீரர் துயிலும் இல்லங்கள் இடித்து நொருக்கப்பட்டுமிருந்தன.

இதன் காரணமாக போராளிகளை நினைவுகூரும் விடயம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் எதிரொலித்தது. இராணுவத்துக்கு எதிராக போரிட்டு உயிர்நீத்தவர்களை அவர்களது உறவினர்கள். நினைவுகூர வேண்டும் என ஐ.நா வலியுறுத்தியது. அதனை தடுப்பது அடிப்படை மனித உரிமை மீறல் எனவும் ஐ.நா சுட்டிக்காட்டியிருந்தது.

இதேவேளை, அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகள் கூட அதற்கு தடை விதிக்க வேண்டாம் என பரிந்துரை செய்தது. எனினும் மகிந்த அரசாங்கம் ஏற்கவில்லை. பாதுகாப்பு அமைச்சராக செயற்பட்ட கோட்டாபய ராஜபக்ச அதனை கடுமையாக மறுத்திருந்தார்.

நினைவுகூர இலங்கை அரசாங்கம் பல தடைகளை விதித்து வந்த காரணத்தினால் தான், இலங்கையில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன என்ற குற்றச்சாட்டு உலக மட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

தற்போது ஆட்சிபீடம் ஏறியிருக்கும் ஜே.வி.பியின் முகத் தோற்றமான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 70-80 களில் சோசலிச சமத்துவம் என்ற பெயரில் இலங்கையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தியிருந்தது. இதனால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருந்தன. அது ஒரு துயர வரலாறு.

எனினும், இராணுவ மோதலில் உயிர்நீத்த தங்கள் போராளிக்காக அவர்கள் கார்த்திகை தினத்தை அனுஷ்டித்து வருகின்றனர். ஆனால் ஒருபோதும் அதற்கு எதுவித தடைகளும் விதிக்கப்பட்டதில்லை. ஏனெனில், ஒரே இனம் என்பதால் அந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

ஆகவே, சிங்களத்தை தாய் மொழியாகக் கொண்ட ஆயுத அமைப்பு ஒன்றுக்கு தடை செய்யப்படவில்லையெனின், அரசாங்கம் புலிகளை காரணம் காட்டி மாவீரர் நாளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அப் பண்பு சுமூகமான ஓர் அரசியல் கலாசாரத்திற்கு இடமளிக்கும்.

வடக்குக் கிழக்குத் தமிழர்கள் கோருவது சுயநிரிணய உரிமை. அந்த சுயநிர்ணய உரிமையின் பிரகாரம் மாவீரர் நாள் என்பது அவர்களுக்கு முக்கியமானது.

தமது தேச விடுதலைக்காக போராடி உயிர்நீத்த போராளிகள் மற்றும் போரில் கொல்லப்பட்ட தங்கள் உறவினர்களுக்காக தீபம் ஏந்தி அனுஷ்டிப்பதை தடுப்பது அரசியல் நாகரிகமல்ல.

இப் பின்னணியில் தங்களை சோசலிசவாதிகளாகக் காண்பித்துக் கொண்டு ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்தி இம்முறை இதற்கு தடை விதிக்கவில்லை. ஆனால் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்ட பின்னணி என்று அதற்கு அர்த்தம் கற்பிக்க முடியாது.

மாவீரர் நாள் என்பதைவிடவும் போரில் உயிர்நீத்த பொதுமக்கள் என்றுதான் ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் வியாக்கியானம் செய்கிறது.

முன்னைய ஆட்சியாளர்களும் மாவீரர் நாள் பற்றி அவ்வாறுதான் கற்பிதம் செய்திருந்தனர். ஆனால், முன்னாள் ஆயுதப் போராளிகள் என்பதால் தேசிய மக்கள் சக்திக்குரிய பொறுப்பு என்பது முன்னைய ஆட்சியாளர்களிடம் இருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும்.

அந்த வேறுபாட்டை தமது அரசியல் - பொருளாதார திட்டங்களில் அநுர அரசாங்கம் வெளிப்படுத்தி வந்தாலும், வடக்குக் கிழக்குத் தமிழர்கள் விவகாரத்தில் ஜேவிபி அப்போது எடுத்திருந்த நிலைப்பாட்டோடுதான் செயற்பட்டு வருகின்றது என்பது பட்டவர்த்தனமாகும்.

ஏனெனில், ஜனாதிபதி அநுரவின் கொள்கை விளக்கவுரையில் அரசியல் தீர்வு அல்லது இலங்கைத்தீவு பன்முகத் தன்மை கொண்ட நாடு என்ற வாசகங்களுக்குப் பதிலாக ஒரு தேசம் என்பதும் சமத்துவம் என்ற சொல்லாடலும் அதிகம் வெளிப்பட்டன.

"சோசலிசம்" "சமத்துவம்" என்பதற்குள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை உள்ளடங்காது. "சமத்துவம்" என்பதன் உள்ளடக்கம் ஒரு இனத்துக்குள் இருக்க வேண்டிய விட்டுக் கொடுப்புகளையே குறிக்கும். மாறாக மற்றொரு தேசிய இனத்தின் சுயமரியாதையை உறுதிப்படுத்தும் சுயநிர்ணய உரிமைக்கு "சோசலிசம்" "சமத்துவம்" என்ற வாதம் பொருத்தமாக இருக்காது.

ஆகவே, மாவீரர் நினைவேந்தல் அனுஷ்டிப்பு தடைகள் எதுவும் விதிக்கவில்லை என்பது மகிழ்ச்சியான தகவலாக இருந்தாலும், அந்த மாவீரர் நாள் என்பதன் சரியான உள்ளடக்கத்தை ஏற்று தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு வழி சமைப்பதே உறுதியான அரசியல் நிலைப்பாடாகும்.

அந்த நிலைப்பாட்டை முன்னெடுக்கும் வகையில் முதலில் அரசியல் - பொருளாதார பொறிமுறைக்குள் தமிழர்கள் உள்வாங்கப்பட வேண்டும். அது நேர்மையான நல்லிணக்கத்துக்கான ஆரம்ப ஏற்பாடாகவும் அமைய வேண்டும்.

# நவம்பர் 26 தேசிய நன்றி தினம்

## 'நன்றி' தெரிவிக்க வேண்டியதன் அவசியம்

தொகுப்பு - து. சிந்துஜா



உலகளாவிய ரீதியில் பல விதமான தினங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன.

அந்த வகையில் ஜோர்ஜ் வொஷிங்டன் அவரது முதல் ஜனாதிபதி பிரகடனத்தில் நவம்பர் 26 ஆம் திகதியை தேசிய நன்றி தினமாக 1789 ஆம் ஆண்டு அறிவித்தார்.

அடுத்தது ஆபிரகாம் லிங்கனால் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26 ஆம் திகதியை நன்றியறிதல் நாளாக 1863 ஆம் ஆண்டு அறிவித்தார்.

இந்த அறிவிப்புக்களின் பிரகாரம் 1941 ஆம் ஆண்டு முதல் நவம்பர் 26 ஆம் திகதி தேசிய நன்றிநவிலும் நாளாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

நன்றி செலுத்துதல் என்பது ஆரம்பகால ஆங்கிலேயே குடியேற்றவாசிகளால் அமெரிக்காவில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி 1619 இல் சர் வில்லியம் த்ரோக்மொர்டன், ரிச்சர்ட் பியர்க்லி, ஜோர்ஜ் தோர்ப் மற்றும் ஜோன் ஸ்மித், கேப்டன் ஜோன் உட்லீஃப்ஸ் ஆகியோர் பல உத்தரவுகளை வழங்கினர்.

அதில் வர்ஜீனியாவில் புதிதாக நிறுவப்பட்ட பெர்க்லி ஹன்ட்ரட் தோட்டத்தில் வருடந்தோறும் நன்றி தெரிவிக்கும் மத அனுசரிப்பும் அடங்கும்.

ஆரம்பகால நன்றி தெரிவிக்கும் தினங்கள் மிகவும் தன்னிச்சையான கொண்டாட்டங்களாக இருந்தன.

இருப்பினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அமெரிக்கா அதன் பிரதேசங்கள் முழுவதிலும் வருடாந்திர நன்றியறிதல் மற்றும் விருந்துண்ணல் வழக்கமாக இருந்தது.

அதன்படி 1863 இலிருந்து அமெரிக்காவின் ஒவ்வொரு ஜனாதிபதியும் ஆண்டுதோறும் நன்றி தெரிவிக்கும் பிரகடனத்தை வெளியிட்டனர்.

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அனுஷ்டிக்கப்படும் இந் நன்றி தெரிவித்தல் நாள், அரசியல், சமூக, கலாசார, சமய முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

இதுவொரு விடுமுறை நாள் என்பதோடு குடும்ப விழாவாகவும் கொண்டாடப்படுகிறது.

## வரலாறு

1620 ஆம் ஆண்டில் நூற்றுக்கும் அதிகமானோரை ஏற்றிக்கொண்டு கப்பலொன்று இங்கிலாந்திலிருந்து அட்லாண்டிக் கடல் மார்க்கமாக ஒரு புனித பயணம் மேற்கொண்டது.

அவர்கள் அமெரிக்காவின் மசாசூட் மாகாணத்தில் வந்து இறங்கியதும் கடுமையான குளிர் மற்றும் பனியால் அவதியுற்றனர்.

அதேநேரம் பசி, நோய் என அனைத்தும் வந்து தாக்கி சிலர் இறந்தும் போனார்கள்.

இத் தருணத்தில் அங்கிருந்த சிவப்பிந்தியர்கள் அவர்களுக்கு உண வளித்து, பயிர்களை எவ்வாறு விளைவிப்பது, மீன் பிடிப்பது போன்றவற்றையும் கற்றுக்கொடுத்தார்கள்.

ஆபத்து நேரத்தில் தங்களை காப்பாற்றி உணவளித்து ஆதரித்தமைக்காக அமெரிக்கர்களுக்கு ஒரு விருந்து கொடுத்தனர்.

அவ் விருந்தில் வான்கோழி முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

விருந்து முடிந்ததும் சில விளையாட்டுக் களையும் அமெரிக்கர்களுக்கு கற்றுக் கொடுத்தனர்.

இதுதான் இன்று வரையில் நன்றி தெரிவித்தல் நாளாக அமெரிக்கர்கள் கொண்டாடுகின்றனர்.

அன்றிலிருந்து அமெரிக்க வந்த காலனிக்காரர்கள் ஒவ்வொரு வருடமும் அறுவடை முடிந்ததும் நன்றி தெரிவிக்கும் நாளை விருந்துடன் கொண்டாடினர்.



## அனுஷ்டிக்கும் முறை

குடும்ப அங்கத்தவர்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் நீண்ட தூரம் பிரயாணம் செய்து தமது பெற்றோர் மற்றும் உடன் பிறப்புக்களோடு சேர்ந்து இந் நாளைக் கொண்டாடுகின்றனர்.

இந்த நாளில் உணவு உண்ணும் பழக்கத்திலும் ஒரு வித்தியாசமும் மரபும் பின்பற்றப்படுகிறது.

அதாவது, வான்கோழியை முழுக் கோழியாக அவித்து, வறட்டி, பொரித்து சமைப்பர். குடல் பகுதியை நீக்கிவிட்டு அதில் அப்பத் துண்டுகள் மற்றும் மூலிகைகள் கொண்ட கலவையை வைத்திருப்பர்.

வான்கோழி இறைச்சி தவிர்ந்து மக்காச் சோளத்தையும் அவித்து உண்ணுவர்.

க்ரான்பெரி பழங்கள், பூசணியிலிருந்து செய்யப்படும் கேக் போன்றவற்றையும் உண்ணுவர்.

இந் நன்றி தெரிவித்தல் நாளில் நாடளாவிய ரீதியில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதோடு, வழிபாட்டுத்தளங்களில் நன்றி மன்றாட்டுக்களும் இடம்பெறும்.

மனித வாழ்க்கையில் இறைவன் செய்துள்ள நன்மைகளுக்கு மக்கள் நன்றி செலுத்துவர்.

## அரசியல்

அரசியல் ரீதியில் இந் நாளானது, மக்களிடையே நல்லுறவை வளர்க்க பயன்படுவதாக கூறப்படுகிறது.

நன்றி என்பது ஒருவர் நமக்கு செய்த உதவியை எக் காலத்திலும் மறக்காமல் இருக்க வேண்டும் என்பதாகும்.

உலகளாவியரீதியில் ஒருவருக்கொருவர் நன்றி கூறிக்கொள்வது சிறந்த விடயமாக பார்க்கப்படுகிறது.

ஆனால், வீடுகளைப் பொறுத்தவரையில் ஒருவருக்கொருவர் நன்றி கூறிக்கொள்வது என்பது மிகவும் குறைவாகவே உள்ளது.

ஒரு சிலர் நன்றி கூறுவதை கௌரவக் குறைச்சலாகப் பார்க்கின்றனர்.

இன்னும் கூறப்போனால் நன்றி கூறுவதற்கென்று ஒரு நாள் இருக்கிறதா என்பது கூட நிறைய பேருக்கு தெரிவதில்லை.

பெரிய பெரிய மேடைகளில் ஏறி தனக்கு உதவியர்கள், தனது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்களுக்கு நன்றி கூறுதல் என்பது பெரிய விடயமல்ல. மாறாக நமக்காக சிறு விடயங்களை செய்தால் கூட அதற்கான குறைந்தபட்ச விடயமாக நன்றி கூறுவது சிறந்தது.

கணவன் – மனைவிக்கிடையில் இந்த நன்றிப் பரிமாற்றம் என்பது மிகவும் குறைவாகவே உள்ளது. நம் கணவர் தானே அல்லது நமது மனைவி தானே என்ற எண்ணத்தில் அவர்கள் செய்யும் செய்கைகளுக்கான அடிப்படை அங்கீகாரமான நன்றி கூறப்படுவதேயில்லை.

எனவே இனியாவது இந்த நன்றிக் கூறும் நாளில் யாருக்கெல்லாம் நன்றிக் கூற விரும்புகிறோமோ அவர்க ளுக்கு கூறிவிடுவோம்.



# குற்றச்சாட்டுக்களை நிரூபிக்குமாறு வலியுறுத்தியுள்ளேன்

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பிரசார மேடைகளில் ராஜபக்ஷக்கள் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக நிரூபிக்குமாறு ஜனாதிபதியிடம் பலமுறை வலியுறுத்தியுள்ளேன். இவ்வாறு பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், அரசியல் களத்தில் தேர்தல் வெற்றிக்காக எவர் வேண்டுமானாலும் எதனையும் குறிப்பிடலாம் என்ற நிலைமை காணப்படுகிறது. வரையறையற்ற வகையில் சேறுபூசல்கள் இடம்பெற்றன. தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை அனைவரும் மறந்து விடுகின்றனர்.

கடந்த காலங்களில் ராஜபக்ஷர்களிடம் 18 லம்போகினி வாகனங்கள் இருப்பதாகவும், உகண்டா நாட்டில் நிதியை பதுக்கி வைத்திருப்பதாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

ஜனாதிபதிதேர்தல்காலத்திலும்ராஜபக்ஷர்கள் உகண்டாவில் நிதியை பதுக்கி வைத்திருப்பதாக குறிப்பிட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பின்னர் அந்த குற்றச்சாட்டுக்கள் பொய் என்று குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பிரசார மேடைகளில் ராஜபக்ஷர்கள் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக நிரூபிக்குமாறு ஜனாதிபதியிடம் பலமுறை வலியுறுத்தியுள்ளேன். உகண்டாவில் பதுக்கி வைத்திருப்பதாக குறிப்பிடும் நிதியை நாட்டுக்கு கொண்டு வந்து அரசுடமையாக்குங்கள். முறையான விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன். குறுகிய அரசியல் வெற்றிக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக் ஷர்கள் மீது பல போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.



## “நினைவு கூருவதற்கு தடை இல்லை” பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு பாராட்டு



யுத்தத்தில் உயிரிழந்தந்தவர்களை நினைவுகூருவதற்கு தடை இல்லை என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்திருப்பது நிச்சயமாக பாராட்டத்தக்க விடயம் என்று தெரிவித்த சர்வதேச இந்து மதபீட செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா, யுத்த காலத்தில் இறந்தவர்களை நினைவுக்கூருவதற்கு ஒரு பொது நாள் ஒன்றை அரசு ஒதுக்கி தருமாக இருந்தால் நிச்சயமாக உலக வாழ் தமிழ் மக்கள் வரவேற்பார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த உயிரிழப்புகளை வருடம்தோறும் அவர்களுடைய உறவுகள் நினைவு கூர்ந்து வருவதை தமிழ் மக்கள் தங்கள் மத அனுஷ்டானங்களை கடைபிடித்து வருவது வழமையானதாகும். இம்முறை அந்த புதிய அரசு இறந்தமக்களை நினைத்து நினைவு கூருவது என்ற யதார்த்ததை புரிந்துகொண்டு நடப்பது தமிழ் மக்களால் வரவேற்கப்படுகிறது.

இந்த நிலையில் பொதுமக்களை நினைவுகூரும் தினத்தை ஒரு பொது விடுமுறை நாளாக அறிவித்தால் நிச்சயமாக அது தமிழ் மக்களால் அது வரவேற்கப்படும். அதேவேளை, வடக்கில் பல காலமாக பூட்டப்பட்டிருந்த வசாவிளான் பலாலி பாதை திறப்பு ஒரு வரவேற்கத்தக்க விடயம். படிப்படியாக இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு மக்களை இயல்பான நிலைக்கு கொண்டுவருவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கை பாராட்டத்தக்க விடயம்.ஒரு சிலர் தேசிய ரீதியான பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று எதிர் தரப்பினர் பிரசாரம் செய்தாலும் நாட்டின் யதார்த்த நிலையை உணர்ந்து அரசு எடுக்கும் நடவடிக்கை நிச்சயமாக தமிழ் மக்களால் வரவேற்கப்படும்.

அதேவேளை, வடகிழக்கு தமிழ் மக்களின் மனதை வெல்லுவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமையும் .

இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் சக வாழ்வுக்கும் வழிவகுக்கும் என சர்வதேச இந்துமதபீட செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான பாடசாலையில் விஷேட வைபவம்





எம்.யூ.எம்.சனூன், எம்.எச்.எம்.சியாஜ்

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையினால் மாற்று திறனாளிகளுக்கான திறமைகளை வெளிக்கொண்டு வர வேண்டும் என்ற மிகப் பெரிய நோக்குடன் சனிக்கிழமை புத்தளம் சவீவபுரத்தில் இயங்கி வரும் நகர சபைக்கு சொந்தமான மாற்றுத்திறனாளிகளுக்கான பாடசாலையில் விஷேட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து மாற்று திறனாளிகளுக்கும்

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் புத்தளம் நகரக் கிளை சான்றிதழ்கள் பரிசு பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக புத்தளம் நகர சபையின் நிர்வாக அதிகாரி ஏ.எம்.நௌசாத், ஆசிரியர் எம்.ஓ.ஜே.நிஜாம் மற்றும் முஹம்மது முஜிபர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## கற்பிட்டியில் இரத்ததான முகாம்

எம் எச் எம் சியாஜ்

சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் (CTJ) கற்பிட்டி கிளை புத்தளம் தள வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் இணைந்து 10வது தடவையாக கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் நடைபெற்ற இரத்த தான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (24) சீ.டி.ஜே யின் கற்பிட்டி கிளைத் தலைவர் எம்.எச்.எம் ஆஷாத் தலைமையில் நடைபெற்றது.

உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் என்ற கருப்பொருளில் இடம்பெற்ற இரத்த தான முகாமில் இன மத வேறுபாடு இன்றி சகலரும் கலந்து கொண்டு தமது இரத்தங்களை வழங்கினர். இதில் கலந்து கொண்டவர்களுக்கு சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் கற்பிட்டி கிளையினால் நினைவு பரிசு ஒன்றும் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



## 28ஆம் திகதி கூடவுள்ள தேர்தல் ஆணைக்குழு

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு தேர்தல் ஆணைக்குழு எதிர்வரும் வியாழக்கிழமை (28) காலை 10.00 மணிக்கு மீண்டும் கூடவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் மற்றும் ஆயர்த்தங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளன.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் விஜித ஹேரத், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் உள்ளூராட்சித் தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அண்மையில் உறுதிப்படுத்தினார்.

அத்துடன், உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பு காரணமாக, இத்தேர்தலை விரைவாக நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனமும் செலுத்தப்பட்டுள்ளது.

தேர்தலை நடத்துவதற்கு இதுவரை பணம் ஒதுக்கப்படவில்லை எனவும், இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

## ருஹுனு பல்கலைக்கழகத்தின் நிர்வாக மேற்பார்வையாளராக சிரேஷ்ட பேராசிரியர் ரத்நாயக்க



ருஹுனு பல்கலைக்கழகத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக, அப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு பதிலாக தகுதி வாய்ந்த அதிகாரியாக சிரேஷ்ட பேராசிரியர் ஆர். எம். யு. எஸ். கே. ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்றுமுன்தினம் விசேட வர்த்தமானியை வெளியிட்டு இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 20(4)(அ) சரத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ருஹுனு பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் பாரியளவில் சீர்குலைந்துள்ளதாகவும், அதனை வழமைக்கு கொண்டு வருவதற்கு நிறுவன அதிகாரிகள் தவறியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, பேராசிரியர் ஆர். எம். யு. எஸ். கே.ரத்நாயக்க நேற்று (25) முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை ருஹுணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரை அப்பதவியில் இருந்து நீக்கியதையடுத்து, ருஹுணு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்துள்ளது.

## பாடலாக்கம் போட்டியில் பர்வினுக்கு மூன்றாம் இடம்

எம் எச் எம் சியாஜ்

”வயம்ப விசுல மினி” மாகாண மட்ட அரச கலை விழாவின் பரிசளிப்பு விழா வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ குமாரசிறி வர்ணசூரிய தலைமையில் குருநாகல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் பொருளாளரும் , கிராம உத்தியோகத்தருமான கவிதாயினி ஏ.எச். எப் பர்வின் பாடலாக்கம் போட்டியில் பங்கு பற்றி மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டார். இதற்காக இவருக்கு சான்றிதழ் மற்றும் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.



மேலும் பாடலாக்கம் போட்டியில் கற்பிட்டி பிரதேச மட்டத்திலும் புத்தளம் மாவட்ட மட்டத்திலும் முதலாம் இடங்களை பெற்றுள்ள இவர். மொஹமட் நூர் இஸ்லாமின் மனைவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிறுவனை கையிலேந்தி போதைபொருள் விற்பனை செய்த பெண்ணொருவர் கைது

எம்.ஏ.அமீனுல்லா

கண்டியில் ஏழு வயதுடைய சிறுவனை தன் வசம் வைத்துக் கொண்டு போதைப்பொருள் விற்பனை செய்து வருவதாக கூறும் முப்பத்தைந்து வயதுடைய பெண் ஒருவர் நேற்று முன்தினம் (23) கண்டி பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த பெண்ணின் தரகர்களாக செயல்பட்ட மேலும் இருவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரிடம் இருந்து 20 போதைப்பொருள் பக்கட்டுகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது :

சந்தேக நபரின் தாயார் கண்டியில் பிரபல போதைப்பொருள் வியாபாரி எனவும் அவர் சில காலத்திற்கு முன்னர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் வாங்க வரும் நபர்களிடம் பணம் பெறும் இந்த பெண், தான் இருக்கும் இடத்தில்இருந்துகொண்டு, சுமார் 100 மீட்டர் தொலைவில் தெரியும் இரண்டு நபர்களுக்கு சைக்கினை மூலம் போதைப்பக்கட்டுகளை வைத்துள்ள வழியை காட்டி மிகவும் சூட்சுமமாக தமது வியாபாரத்தை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சில காலங்களுக்கு முன்னர் உயிரிழந்த தனது தாயின் மரணத்திற்குப்பின்னுள்ள மத கிரியைகளுக்காக (தானம் ) பணம் சம்பாதிப்பதற்காக போதைப்பொருள் விற்பனை செய்ததாக கூறும் மேற்படி சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

உடன் இருந்த குழந்தையை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் தனது கணவரிடம் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கண்டி பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# ஆசனத்திலிருந்து என்னை எவ்வாறு எழுப்ப முடியும்.!

**மருத்துவர் அர்ச்சுனா எம்.பி. பேட்டியில் தெரிவிப்பு**

நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா நாடாளுமன்ற முதல் நாள் அமர்வின் போது எதிர்க்கட்சித் தலைவருக்கான ஆசனத்தில் அமர்ந்தமை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அவர் வழங்கிய பேட்டியின் தமிழாக்கம் இங்கு வழங்கப்படுகின்றது ..

> **நாடாளுமன்றத்தில் ஒழுக்கம் என்பதே முதன்மையானது. படைக்கல சேவிதர் உண்மைகளை விளக்கிய பின்னராவது, நீங்கள் அங்கிருந்து எழுந்து சென்றிருக்கலாம் தானே ?**

**கேள்வி - நீங்கள் நாடாளுமன்றத்திற்கு எந்த சுயேச்சை குழுவிலிருந்து தெரிவானீர்கள்?**

**பதில்** – சுயேச்சை குழு எண் 17 இலிருந்து

**கேள்வி - நீங்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட போது மருத்துவ சேவையிலிருந்து விலகியா இருந்தீர்கள் ?**

**பதில்** – ஆம். விலகியே இருந்தேன். எனது சேவை சுகாதார அமைச்சினால் 29.09.2024 அன்று இடைநிறுத்தப்பட்டிருந்தது.

**கேள்வி - சேவை இடைநிறுத்தப்பட்டதற்கான காரணம் என்ன?**

**பதில்** – ஆங்கிலத்தில் 'Unacceptable behavior of Dr. Ramanathan Archuna" (மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவின் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை) என்ற தலைப்பில் எனக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருந்து. செப்டெம்பர் மாதம் 26ம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 10ம் திகதி வரை சிறையில் இருந்தேன்.

**கேள்வி - சிறை சென்றதற்கான காரணம் ?**

**பதில்** – 13.06.2024 அன்று நான் சாவகச்சேரி வைத்தியசாலையின் பணிப்பாளராக நியமிக்கப்பிட்டிருந்தேன். அப்போது மருத்துவமனையில் மோசடி நடந்ததால், தொழிற்சங்கத்தினர் மீது நடவடிக்கை எடுத்தேன். இதனால் அவர்கள் மூன்று நாட்களாக மருத்துவமனையில் வேலை நிறுத்தம் செய்தனர். அந்த மூன்று நாட்களும், அந்த மருத்துவ மனையின் வேலைகளை நான் மட்டுமே தனியே கவனித்துக் கொண்டேன். அதன் பிறகு, நான் அதை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியபோது, மக்கள் திரண்டு வந்து அந்த மருத்துவர்களை தாக்கத் தொடங்கினர். பின்னர் மருத்துவர்கள் அனைவரும் ஒன்று கூடி என் மீது புகார் அளித்தனர். அந்த வழக்கு

இன்னும் விசாரணையில் உள்ளது. சிறைக்குச் செல்வதற்கு முன்னர் 180 நாட்கள் இந்தப் பிரச்சினை இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதனால்தான் திடீரென சுயேச்சையாக போட்டியிட்டு நாடாளுமன்றம் சென்றேன்.

**கேள்வி - நீங்கள் மருத்துவ தொழில் செய்துகொண்டே தான் நாடாளுமன்ற தேர்தலுக்கு போட்டியிட்டதாக வடக்கில் உள்ள பல தமிழ் அரசியல் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. அதைப் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில்** - செப்டெம்பர் 29 ஆம் திகதி, எனது சேவை இடைநிறுத்தப்பட்ட கடிதத்தை எனது முகநூலில் பதிவிட்டுள்ளேன்.

> **எனது மக்களுடன் நேரலையில் இணைவது எனது உரிமை. அந்த நேரலையின் போது இந்த சம்பவம் நடந்துள்ளது. மற்றது, நாடாளுமன்றத்திற்குள் ஃபோனை உள்ளே கொண்டு செல்ல முடியாது என்று விதி இருந்தால், நான் அதை கொண்டு சென்றிருக்க மாட்டேன்**



இது குறித்து நாடாளுமன்றத்தில் நான் உரையாற்றவும் உத்தேசித்து ள்ளேன். இந்த வழக்கின் முதற்கட்ட விசாரணை ஜுலை மாதம் 8ம் திகதி நடைபெற்றது. ஆனால், இன்று வரை அது தொடர்பான அறிக்கை வெளியிடப்படவில்லை. நான் என்ன தவறு செய்தேன் என்று தெளிவாக குறிப்பிடப்படவில்லை. நான் மருத்துவர்கள் சிலரை தொழிலிலிருந்து அகற்றவும் முயன்றேன். அதற்குக் காரணம், அரசு மருத்துவமனையில் சில நாட்கள் மட்டுமே பணிபுரிந்துவிட்டு, மீதமுள்ள காலங்களில் தனியார் மருத்துவமனைகளில் இவர்கள் பணியாற்றி வந்தமை தான். பின்னர் அந்த மருத்துவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். புலம்பெயர் மக்களிடமிருந்து பணம் சேகரித்து மருத்துவமனைக்கு கொண்டு வந்த ரூ.17 மில்லியன் பெறுமதியான பொருட்கள் காணாமல் போயிருந்தன. இது குறித்து முகநூலில் பதிவிட்டுள்ளேன். தொழிற்சங்கங்களில் உள்ள அனைவரும் எனக்கு எதிராக இருந்தனர். அந்த மருத்துவர்களில் ஒருவர் என்னை தாக்கினார்கள். இதுபோன்ற பல சம்பவங்கள் அப்போது நடந்திருந்தன.

**கே: இருந்தபோதிலும் நீங்கள் எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்தது மட்டுமல்லாமல் படைக்கல சேவிதருக்கு சவால் விட்டீர்கள். இது எந்தளவு நெறிமுறையானது? உங்களது நடத்தையை எவ்வாறு நியாயப்படுத்துவீர்கள்?**

**பதில்:** நீங்கள் முதல் முறையாக மருத்துவமனைக்குச் செல்லும்போது, ICU படுக்கை எங்கே உள்ளது என்று உங்களுக்குத் தெரிந்திருக்குமா? இல்லைதானே ? மேலும் நான் ஒரு மருத்துவர். ஒரு மருத்துவமனையின் பணிப்பாளர். எனக்கு அரசியல் கூட தெரியாது. இப்படியான நிலையில் எதிர்க்கட்சித் தலைவருக்கான ஆசனம் எது? இன்னாரின் ஆசனம் எது என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை, நாடாளுமன்றத்தின் இணையதளத்திற்குச் சென்று பாருங்களேன், முதல் நாளில் யாருக்காவது ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்று. படைக்கல சேவிதர் என்னிடம் வந்து இது எதிர்கட்சித் தலைவருக்கென ஒதுக்கப்பட்ட ஆசனம் என்றார். ஆனால், அந்த சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் இருக்கவில்லை. அப்போது யாராவது வந்து "நான் தான் எதிர்க்கட்சித் தலைவர், ஆசனத்திலிருந்து எழுந்திருங்கள்" என்று சொன்னால் நான் ஆசனத்திலிருந்து எழுந்திருக்கத்தான் வேண்டுமா?, யாருக்கும் ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லை, எவரும் எங்கேயும் அமரலாம் என ஏன் கூறப்பட்டிருந்தது? இதைத்தான் "சிங்களவன் ஒரு முட்டாள் – கொண்டை பணியாரம் தின்பதற்கே கெட்டிக்காரன்" என்கிறார்கள். இவ்வாறு சிங்களவர்களே தான் கூறுகின்றனர். இதன் போது எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் புலி வந்து அமர்ந்ததாக ஊடகவியலாளர்கள் பெரிதாகப் பேசினர். சிங்களவர்கள் முட்டாள்கள் என கூறப்பட்டாலும் இந்தளவிற்கு முட்டாள்கள் என்பதை நான் அறிந்திருக்கவில்லை.

**கேள்வி - ஆனால் , நாடாளுமன்றத்தில் ஒழுக்கம் என்பதே முதன்மையானதாகும். படைக்கல சேவிதர் உண்மைகளை விளக்கிய பின்னராவது, நீங்கள் அங்கிருந்து எழுந்து சென்றிருக்கலாம் தானே ?**

**பதில்** - இத்தனை காலமும் எதிர்க்கட்சித் தலைவர் அமர்ந்திருந்த ஆசனம் இதுதான் என நான் அமர்ந்திருந்த ஆசனத்தை காட்டி படைக்கல சேவிதர் கூறினார். அதுவொரு சம்பிரதாயமாம். இதுவொரு பாடசாலை அல்லவே ? தாமதித்து வந்தால் யாராகினும் பின் வரிசையில் சென்றுதான் அமர பழகிக்கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் இந்த நாடு என்றைக்குமே முன்னேற மாட்டாது. நான் அந்த ஆசனத்தில் புலி என்ற ரீதியிலோ, பிரபாகரனின் பெயரை பாவித்தோ அமரவில்லை. எதிர்கட்சித் தலைவரின் கதிரையை வேறுபடுத்தி வைக்க வேண்டுமென்றால் அவருக்கான அந்த கதிரையை ஒரு சில அடிகள் உயரமாக அமைத்தால் பிரச்சினை தீர்ந்தது தானே? நாடாளுமன்றத்தின் உள்ளே அனைவரும் சமமே. எதிர்கட்சித் தலைவருக்கு ஆசனத்தை கொடுக்கவா மக்கள் எனக்கு வாக்களித்தனர் ?

> **சிங்களவன் முட்டாள், பணியாரம் உண்ணுவதில் மாத்திரம் கெட்டிக்காரன் என்று சொல்ல ப்படுகிறது.**

**கேள்வி - ஆனால், குறைந்த பட்ச ஒழுக்கம் என ஒன்று உள்ளதல் லவா ? அதை நீங்கள் கடைப்பிடித் திருக் கலாம் அல்லவா?**

**பதில்** : விடயம் என்னவென் றால், இங்கு எதிலுமே அந்த கதிரை எதிர்கட்சித் தலைவருடையது என எழுதி வைத்திருக்க வில்லை தானே ?. அப்படி இருந்தால் அனுரவின் அரசாங்கம் இப்போதிருந்தே பொய் செய்வதாகத் தான் அர்த்தம்.

> **நான் அந்த ஆசனத்தில் புலி என்ற ரீதியிலோ, பிரபாகரனின் பெயரை பாவித்தோ அமரவில்லை.**

**கேள்வி - அந்த நேரத்தில் ஒரு சிறு பிள்ளைபோல் வீடியோவை ஒன் செய்திருந்த நீங்கள் அதில் எதை எதிர்பார்த்தீர்கள் ? சிற்றுண்டி அறையிலும் அவ்வாறே நடந்து கொண்டீர்கள். ஒரு நாட்டிற்கு சேவையாற்றுவதற்காக வந்த ஒருவர் இவ்வாறு நடந்து கொள்வது முறையாகுமா ?**

**பதில்** – அப்படியானால் நான் வீடியோ எடுத்ததால் தானே உங்களுக்கு இது தெரிய வந்தது. இல்லாவிட்டால், நாடாளுமன்றத்தில் இவ்வாறானவை நடக்கின்றன என்பது யாருக்காவது தெரிந்திருக்குமா?

**கேள்வி - நீங்கள் செய்த இந்த செயல் சமூகத்திற்கு தவறான பிம்பத்தை கொடுத்தது என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா? பெருமளவு மக்கள் இதனை பார்த்துக்கொண்டிருந்தனர் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றீர்களா .. ?**

**பதில்** - இல்லை, இல்லை. நேரடி காணொளி மூலம் எனது வடக்கு மக்களுடன் தொடர்பில் இருந்தேன். நாடாளுமன்றத்திற்குள் என்ன நடக்கிறது என்பது அந்த மக்களுக்கு தெரியாது. நாடாளுமன்றத்தில் நடப்பதை நேரலையில் காட்டுமாறு அவர்கள் என்னிடம் கேட்டார்கள். எனது மக்களுடன் நேரலையில் இணைவது எனது உரிமை. அந்த நேரலையின் போது இந்த சம்பவம் நடந்துள்ளது. மற்றது, நாடாளுமன்றத்திற்குள் ஃபோனை கொண்டு செல்ல முடியாது என்று விதி இருந்தால், நான் அதை கொண்டு சென்றிருக்க மாட்டேன். ஒரு டொக்டராக இருந்து, இவைகளை அறியாமல் இப்படி நடந்து கொள்ள நான் முட்டாளா? அதைத்தான் சிங்களவன் முட்டாள், பணியாரம் உண்ணுவதில் மாத்திரம் கெட்டிக்காரன் என்று சொல்லப்படுகிறது.

**கேள்வி - அதன் பிறகு என்ன நடந்தது?**

**பதில்** - அதன் பின்னர் நான் அதே கதிரையில் தொடர்ந்து அமர்ந்தேன். ஆனால் ஒரு சிறிய சம்பவம் நடந்தது. தேநீர் இடைவேளை முடிந்து மீண்டும் நாடாளுமன்ற ஆசனத்திற்கு வந்த போது படைக்கல சேவிதரின் சேவகர் ஒருவர் நான் அமர்ந்திருந்த கதிரையை மறைத்து நின்றவாறு இது எதிர்கட்சித் தலைவரின் ஆசனம் என கூறியவாறு, நான் அதில் அமர்வதை தடுத்துக்கொண்டு நின்றார். நான் அப்போது அவரைப் பார்த்து "உனது கன்னத்தில் அறைந்து விடுவேன், இங்கிருந்து போய்விடு " என்று கூறினேன்.

எனது பைகள் மற்றும் மடிக்கணினிகள் அனைத்தும் அவ்விடத்தில் இருக்கும் போது, அவர் எனது கதிரையை மறைத்தவாறு தடுத்துக்கொண்டு நின்றார். இவற்றை வெளியே உள்ளவர்கள் பார்க்கும் வகையில் நேரலையில் காட்டியதற்காக அனைவரும் எனக்கு மதிப்பளிக்க வேண்டும்.

> **எனது பைகள் மற்றும் மடிக்கணினி கள் அனைத்தும் அவ்விடத்தில் இருக்கும் போது, அவர் எனது கதிரையை மறைத் தவாறு தடுத்துக் கொண்டு நின்றார்...!**

**கேள்வி - பிரபாகரன் உங்களுக்கு கடவுள் என்று ஒரு வீடியோவில் குறிப்பிட்டுள்ளீர்கள். இந்த அறிவிப்பின் அடிப்படை என்ன? இதன் மூலம் நாட்டுக்கு என்ன சொல்ல முயற்சிக்கின்றீர்கள் ?**

**பதில்** - பிரபாகரன் என் கடவுள் என்பதை நான் இப்போதும் கூறுகிறேன். அதனை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். எனது தந்தை இலங்கை பொலிஸ்துறையில் பணிபுரிந்திருந்தார், பின்னர் எல்ரீரீஈ பொலிஸிலும் பணியாற்றியிருந்தார். 2022 இல் மக்கள் கோத்தபாயவை துரத்தும்போது, இன்று பிரபாகரன் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என எத்தனையோ சிங்கள மக்கள் அன்று கூறினார்கள் அல்லவா?

**கேள்வி - எமக்குத் தெரிந்த வரையில் தெற்கில் அரசியலை வெல்லச் செய்வதற்காக தமது வாக்குகளைப் பயன்படுத்திய தமிழ் மக்களோ அல்லது தென்னிலங்கை சிங்கள மக்களோ அவ்வாறு கூறியதில்லை..**

**பதில்** – (சிரிக்கிறார்) அதுதான் கூறினேனே .. சிங்களவன் முட்டாள், பணியாரம் தின்ன .... ? மிகுதியை நீங்களே கூறிக்கொள்ளுங்கள்.

**கேள்வி - உங்களைக் கேள்வி கேட்பவர் நான். நீங்கள் தான் எனக்கு பதில் கூற வேண்டும் .**

**பதில்** - நீங்கள் கேட்க வேண்டியுள்ள கேள்விகள் அவ்வளவு தானா.? மிக்க நன்றி.

**நன்றி: திவயின**
**தமிழில் : வி. ரெட்லி ஹெறிசன்**

## முல்லைத்தீவில் கடும் மழை

# வட்டுவாகல் பாலம் நீரில் மூழ்கியது



(எஸ்.பாஸ்கரன்)

சீரற்ற காலநிலை கரணமாக முல்லைத்தீவு நந்திக்கடல் ஆறு பெருக்கெடுத்தமையால் வட்டுவாகல் பாலம் நேற்று வெள்ள நீரில் மூழ்கியது.

இதனால் அவ்வீதியில் பயணிப்பவர்கள் நேற்று கடுமையான போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்நோக்கினர்.

நந்திக்கடல் முகத்துவாரம் வெட்டப்பட்டு, நந்திக்கடல் ஆற்றுநீரை விரைந்து கடலில் விடுவதுடன் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமென உதவி மாவட்ட செயலாளர் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஆகியோரால் நேற்று தெரிவிக்கப்பட்டது.

பருவமழை காலங்களில் குறித்த பாலம் வெள்ள நீரில் மூழ்குவதால் பாலம் ஏற்கனவே ஆபத்தான நிலையில் காணப்பட்டதுடன் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக பாலத்தின் புனரமைப் பணிகள் தொடர்பில் வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதற்கான அமைச்சரவை தீர்மானங்களும் கொண்டுவரப்பட்டு பின்னர் அவை கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வாகனம் மீது மரம் முறிந்துவிழுந்து சேதம்



(எஸ்.பாஸ்கரன்)

பரந்தன் –முல்லைத்தீவு வீதியின் சுண்டிக்குளம் சந்திப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றின் மீது நேற்று மரம் ஒன்று முறிந்து விழுந்தது.

வர்த்தக நிலையம் ஒன்றுக்கு பொருட்களைக் கொண்டு சென்ற வாகனம் ஒன்று பாதையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது திடீரென வீசிய காற்றின் காரணமாக பாரிய மரம் ஒன்று வாகனத்தின் மீது விழுந்துள்ளது.

இதனால் வாகனத்திற்கு சேதமேற்பட்டதுடன் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. சாரதி மற்றும் நடத்துனர் தெய்வாதீனமாக உயர் தப்பியுள்ளனர்.

## வவுனியாவில் அடைமழையால் மாணவர்கள் அசௌகரியம்



(கி.வசந்தன்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பித்துள்ளது. அந்தவகையில் வவுனியா மாவட்டத்திலும் அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு நேற்றையதினம் பரீட்சை செயற்பாடுகள் ஆரம்பித்திருந்தன. இம்முறை உயர்தர பரீட்சைக்கு வவுனியாவில் 2420 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளதுடன், அவர்களுக்காக 20 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 9 இணைப்பு காரியாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் பெய்த கடும் மழைக்கு மத்தியில் மாணவர்கள் பரீட்சைக்கு சென்றதுடன், மழையினால் பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## இ.போ.ச. பஸ் மீது கல்வீச்சு தாக்குதல்



யாழ்ப்பாணம் பருத்தித்துறையிலிருந்து கட்டைக்காடு நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபை பஸ் மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து நேற்று முன்தினம் (24) மாலை 6.15 மணிக்குப் புறப்பட்ட பஸ் வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதிக்குச் சென்றபோது இனம் தெரியாதோரால் கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பஸ்ஸின் முன்பகுதி கண்ணாடி முற்றாக சேதமடைந்துள்ளது. இரவு நேரத்தில் பயணிக்கும் இந்த பஸ்ஸில் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம், பயணிகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பருத்தித்துறையில் மாவீரர் பெற்றோருக்கு மதிப்பளிப்பு



தமிழீழத் தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வு பருத்தித்துறை – சுப்பர்மடத்தில் நேற்று (25) காலை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை – சுப்பர்மடம் பொதுநோக்கு மண்டபத்தில் விசேடமாக ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு மாவீரர் வாரம் உணர்வு பூர்வமான முறையில் கடந்த 21 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதன் ஒரு பகுதியாக மாவீரர் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று (25) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றுள்ளது.

சுப்பர்மடம் முனியப்பர் ஆலயத்திலிருந்து மங்கள வாத்திய இசையுடன் மாவீரர் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் பொதுநோக்கு மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டு அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. மாவீரர் பெற்றோரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு ஈகைச்சுடர்களும் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து மாவீரர் நாள் சிறப்பு குறித்த உரைகளும் அவ்வூர் சிறுவர்களின் நடனம், கவிதை வாசிக்கும் நிகழ்வுகள் இடம்பெற்று மாவீரர் பெற்றோருக்கு வேட்டி, சேலை, மாவீரர்களின் நினைவு படம் என்பன வழங்கி மதிப்பளிக்கப்பட்டிருந்தன. இதன்போது மாவீரர்களது பெற்றோர், உரித்துடையோர் உள்ளிட்ட ஊர் மக்கள் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஓலைத்தொடுவாய் இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மக்களை சந்தித்தார் ரவிகரன் எம்.பி



மன்னாரில் வெள்ள அனர்த்தப் பாதிப்புக் காரணமாக மன்னார் – ஓலைத்தொடுவாய் றோமன்கத்தோலிக்க அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

காற்றாலை திட்டத்தின்போது வடிகால்கள் மூடப்பட்டதனாலேயே ஓலைத் தொடுவாய் பகுதியில் வெள்ளப் பாதிப்பு அதிகரித்திருப்பதாக மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு காற்றாலைத் திட்டத்தின்போது மூடப்பட்ட வாய்க்கால்களை மறுசீரமைப்புச் செய்தால் வெள்ள அனர்த்தத்தைக் குறைக்கமுடியும் எனவும், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் இதன்போது மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

## வவுனியாவில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு





(கி.வசந்தன்)

வவுனியாவில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஒழுங்கமைப்பில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மாவீரர்களின் நினைவு சார்ந்த உருவப் படம் அங்கிருந்து மேள, தாள வாத்திய இசையுடன் எடுத்து வரப்பட்டு நகரசபை கலாசார மண்டபத்தில் வைக்கப்பட்டது.

பிரதான ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, மாவீரர்களுக்கான அகவணக்கத்தை தொடர்ந்து அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த மாவீரர்களின் படங்களுக்கும், மாவீரர்களின் நினைவு சார்ந்த பொது படத்திற்கும் மலர் தூவி, மாலை அணிவித்து தீபமேற்றி மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர். இதன்போது மாவீரர்களின் பெற்றோர்களின் கண்ணீராலும், கதறலாலும் மண்டபமே சோகமானது.

தொடர்ந்து, நினைவு உரைகள், நடன நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு, மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெருமளவான மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவுகள் கலந்து கொண்டனர்.

## வவுனியா ராமயன்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

### தடுப்பு நடவடிக்கையில் விவசாயிகள்



(கி.வசந்தன்)


வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் அமைந்துள்ள ராமயன்குளம் உடைப்பெடுக்கும் அபாயம் காணப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அப்பகுதி கம நல சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய விவசாயிகள் உடனடியாக அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

100 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலத்தைக் கொண்ட ராமயன்குளம் அதிகளவான மழை வீழ்ச்சியின் காரணமாக உடைப்பெடுக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

எனவே, இப் பேரிடரைத் தடுக்கும் முகமாக விவசாயிகளினால் மண் மூடைகள் அடுக்கி முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# கிழக்கில் தொடர் மழை:

# கடும் காற்று வெள்ள அபாயம்





(காத்தான்குடி நிருபர், பாறூக் ஷிஹான், அக்கரைப்பற்று நிருபர், கியாஸ் சாபி)

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக வெள்ளம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகளவான கனமழை பெய்யக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பகுதியை சூழவுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வு பகுதி (25) தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியை சுற்றி காற்றமுத்த தாழ்வு மண்டலமாக உருவாக்கியதால் ஏற்பட்டதென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும்.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது 30-40 கி.மீ வரை பலத்த காற்று வீசக்கூடும். இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய விபத்துக்களை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொது மக்களிடம் கோரியுள்ளது. இதேவேளை, தொடர்ச்சியாக கன மழை பெய்வதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் நாளாந்த கூலி வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அனர்த்தங்கள் இடம்பெறும் இடங்களுக்கு கூட்டம் கூட்டமாக பார்வையிடச் செல்வதை தவிர்த்து பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பெரிய நீலாவணை, பாண்டிருப்பு , நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ,காரைதீவு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று,பகுதிகளில் பல குடும்பங்கள் வெள்ளத்தினால் நிர்க்கதிக்குள்ளாகி உள்ளதுடன் தற்போது அங்குள்ள மக்கள் வீடுகளுக்குள் மழை வெள்ளம் உட்புகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், இதன் காரணமாக பொது மக்கள் மழை, காற்று போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பாகவும், விபத்துக்களை தவிர்ப்பது தொடர்பாகவும் பிரதேச செயலாளர்கள், அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களினால் அவ்வப்போது அறிவித்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக, வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதால்,குறிஞ்சாகேணி பாலத்தால் பயணிப்பவர்கள் அவதானமாக இருப்பதோடு. வெள்ள அபாயத்தை எதிர் நோக்கக்கூடிய உயர்தர பரீட்சார்த்திகள் கிண்ணியா பிரதேச அனர்த்த முகாமைத்துவ பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி தெரிவித்துள்ளார்.

குறிஞ்சாகேணி பாலத்தின் நீர்மட்டமும் அதிகரித்து உள்ளது. இதனால் இந்த பாலத்தின் ஊடாக போக்குவரத்து செய்பவர்கள் அவதானமாக செல்வது பாதுகாப்பானது. கிண்ணியா பிரதேச செயலகத்திலும் பல தாழ்நிலை பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பரீட்ச்சாத்திகள் பரீட்சை மண்டபங்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து பிரச்சினைகள் எதிர்நோக்வோர் முன்கூட்டியே 0779592709 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

எந்த நேரமும் அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கு, பிரதேச செயலக ஊழியர்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர்.

# அடை மழையிலும் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள்












(வி.சுகிர்தகுமார், கியாஸ் ஷாபி,)

பலத்த அடைமழை மற்றும் சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் அம்பாரை மாவட்டத்தில் க.பொ.த. உயர் தரப்பரீட்சை நேற்று (25) ஆரம்பமானதுடன் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் மிகவும் ஆர்வத்துடன் பரீட்சை நிலையங்களுக்கு சென்றதைக் காணமுடிந்தன.

திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பரீட்சை நிலையங்களில் பரீட்சை ஆரம்பித்ததுடன் அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா தேசிய பாடசாலையிலும் பரீட்சை நடைபெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை மற்றும் கிழக்கு மாகாணத்தில் பெய்துவரும் அடை மழை வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட பல்வேறு காரணிகள் மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் தாக்கம் செலுத்தியபோதும் மாணவர்கள் இறைவழிபாட்டின் பின்னர் ஆர்வத்துடன் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தயாராகிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

ஆயினும் பெற்றோர்கள் பலர் பாடசாலைக்கு முன்பாக கூடியிருந்ததுடன் பரீட்சைக்கு சமூகமளிப்பதில் மாணவர்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டதாக கவலையுடன் சிலர் உரையாடியதையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை,பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களுக்கு மத்தியில் திருகோணமலை மாவட்டத்தில், உயர்தரப் பரீட்சை நேற்று(25) ஆரம்பமானது.

திருகோணமலை மாவட்டத்தில், 6900 மாணவர்கள் பரீட்சைக்காக விண்ணப்பித்திருக்கின்றனர். இவர்களுக்காக 46 பரீட்சை நிலையங்களில் நேற்று பரீட்சைகள் ஆரம்பமாகின. அபாயத்தை எதிர் நோக்கக்கூடிய உயர்தர பரீட்சார்த்திகள் பிரதேச அனர்த்த முகாமைத்துவ பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட பிரதேச செயலாளர்களினால், முன்கூட்டியே அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கினங்க, போக்குவரத்து பிரச்சினைகளை எதிர்நோக்கிய மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுப்பதற்கு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

இதேவேளை, வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா நேரடியாக விஜயம் செய்து பார்வையிட்டார்.திருகோணமலை, தம்பலாகமம்,

மூதூர் கிண்ணியா மற்றும் சேருநுவர ஆகிய பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று, வெள்ள அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான நிவாரண வசதிகளை செய்து

கொடுப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை முன்னெனெடுக்குமாறும் குறித்த பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

## மட்டு. பொலிஸ் நிலையத்தில்

# சிறுவர், பெண்கள் பிரிவுக்கு புதிய கட்டிடம் திறப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையத்தில் ஜப்பான் நாட்டு நிதி பங்களப்புடன் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவு கட்டிம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (24) திறந்து வைக்கப்பட்டது.இதில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித்ரோஹண திறந்துவைத்தர். வேள்ட் விஷன் நிறுவனம்,ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் மற்றும் ஜப்பான் நிதியுதவியுடன் 7 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதில் அதிதிகளாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண,சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் சுகத் விஸாந்த, சிரேஷ்ட பொலிஸ் அதியட்சகர் அமல் ஏ எதிர்மன்ன, உதவி பொலிஸ் அத்தியட்சகர் பண்டார உட்பட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# வதந்திகளை நம்ப வேண்டாம்

சூறாவளி உருவாகி கல்முனையை தாக்கும் என்று பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாமென அனர்த்த முகாமைத்துவ அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர்களான ரியாஸ் மற்றும் சியாட் ஆகியோர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் சூறாவளி ஒன்று உருவாகும் பட்சத்தில் மக்களுக்கு அது தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஊடாக உடனடியாக அறிவிக்கப்படும் என்பதனை மிகவும் பொறுப்புடன் அறியத்தருகின்றோம். மேலும் வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக அதிக மழைவீழ்ச்சி கிடைக்கக்கூடிய வாய்ப்பு காணப்படுவதனால் அனைவரும் வெள்ள அனர்த்தத்துக்குரிய முன்னாயத்தங்களை மேற்க்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இறந்து கரை ஒதுங்கியுள்ள முதலைகள்

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் வெள்ள நீரில் இறந்த நிலையில் முதலைகள் கரை ஒதுங்கியுள்ளன. குறித்த முதலைகள் நேற்று இறந்து கரையொதுங்கியமை பொதுமக்கள் மத்தியில் அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். மாவடிப்பள்ளி பாலத்திற்கு அருகில் முதலைகள் பல அண்மைக்காலமாக காணப்பட்டன. மேலும் இப்பாலத்தை அண்டிய பகுதிகளில் சுமார் 30ற்கும் அதிகமான முதலைகள் காணப்பட்ட போதிலும் தற்போது 10 முதல் 15 வரையிலான முதலைகளே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 7 அடி முதல் 8 மற்றும் 9 அடி முதலைகள் தற்போது இறந்த நிலையில் நீரில் மிதந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## வெள்ள இடருக்கு முன்னரான ஆயத்தம்

# தெளிவுபடுத்தும் செயலமர்வு



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

எதிர்கொள்ளப் போகும் மழை, வெள்ளம் போன்ற இடர்களுக்கு முன்னாயத்தம் தொடர்பாக அரச உத்தியோ கத்தர்களுக்குத் தெளிவூட்டும் இரு நாள் செயலமர்வு மட்டக்களப்பு ஈஸ்ற் லகூன் விடுதியில் நடைபெற்றது. மட்டக்களப்பு, மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, அக்டெட் நிறுவனம் ஆகியன இணைந்து இந்த செயலமர்வை நடாத்தின. முதல் நாள் செயலமர்வினை மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜ/லேகா ஆரம்பித்து வைத்தார். இந்த செயலமர்வில் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சியாத், மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசன திணைக்களம், நில அளவைத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், வானிலை அவதான நிலையம், பிராந்திய சுகாதாரப் பணிமனை, கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், கல்வித் திணைக்களம் உள்ளிட்ட மேலும் பல திணைக்களங்களின் உயரதிகாரிகள் உத்தியோகத்தர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உயரதிகாரிகள், அக்டெட் நிறுவனத்தின் உயரதிகாரிகள் ஆகியார் கலந்து கொண்டனர். இச்செயற்திட்டமானது கிரான், வெல்லாவெளி, வவுணதீவு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேருக்கு நேர் மோதி இரு பஸ்கள் விபத்து: நால்வர் காயம்





(க.கிஷாந்தன்)

அதிவேகமாக பயணித்த தனியார் பஸ் ஒன்று எதிர்த்திசையில் வந்த இ.போ.ச பஸ்ஸுடன் மோதியதில் தனியார் பஸ்ஸின் பின் பகுதி உடைந்துள்ளதோடு, நால்வர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை கரோலினா தோட்ட பகுதியில் நேற்று (25) காலை 6.40 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. கினிகத்தேனையிலிருந்து ஹட்டன் நோக்கிச் சென்ற ஹட்டன் இ.போ.ச டிப்போவிற்கு சொந்தமான பஸ்ஸும், ஹட்டனிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

ஹட்டனிலிருந்து கண்டி நோக்கி அதிவேகமாகச் சென்ற தனியார் பஸ், எதிர்திசையில் வந்த இ.போ.ச பஸ்ஸை வளைவொன்றில் கண்டு வேகத்தை கட்டுப்படுத்த முயற்சித்தவேளை தனியார் பஸ்ஸின் பின்பகுதி நழுவி இ.போ.ச பஸ்ஸின் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. தனியார் பஸ்ஸின் பின் பகுதி இரண்டாகப் பிரிந்துள்ளதாக இந்த விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்த நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும், நிலவும் மோசமான வானிலையுடன் ஹட்டன் கொழும்பு பிரதான வீதி மற்றும் ஏனைய சில வீதிகள் வழுக்கும் தன்மையுடன் இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் தனியார் பஸ்ஸுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் வட்டவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சீரற்ற காலநிலையால் மாணவர்கள் சிரமம்



(க.கிஷாந்தன்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை நேற்று (25) ஆரம்பமாகி நாடு முழுவதுமுள்ள 2312 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றுவருகிறது.

நேற்று மலையகத்தில் நிலவிய சீரற்ற காலநிலையிலும் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பரீட்சைக்கு செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் பரீட்சை மண்டபத்திற்கு செல்வதைப் படத்தில் காணலாம்.

# சமூக உரிமைக்கான எனது அரசியல் பயணம் தொடரும்

## முன்னாள் எம்.பி. வேலுகுமார்

(க.கிஷாந்தன்)

சமூக உரிமை மற்றும் சமூக நீதியை மையப்படுத்தியதாகவே எனது நாடாளுமன்ற அரசியல் பயணம் அமைந்தது. தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாவிட்டாலும் மேற்படி இலக்கை நோக்கிய அரசியல் பயணம் தொடரும் என்று கண்டி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

தனது ஆதரவாளர்கள் சிலருடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2015 ஆம் ஆண்டு எனது நாடாளுமன்ற அரசியல் பயணம் ஆரம்பமானது. இரு தடவைகள் கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைத் தக்கவைப்பதற்கு தலைமைத்துவம் வழங்கினேன். சமூக நீதி மற்றும் சமூக உரிமைகளை மையப்படுத்தியதாகவே எனது நடவடிக்கைகள் அமைந்தன. நாடாளுமன்றத்திலும் உரிமை அரசியல் பற்றியே அதிகம் பேசி உள்ளேன். அதேவழியில் எனது பயணம் தொடரும். அந்த பயணத்தை மேற்கொள்வதற்கு, இலக்கை அடைவதற்கு நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாவிட்டாலும் துணிந்து செயற்படுவேன். கண்டி மாவட்டத்துக்குரிய தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதில் சிலர் முன்னின்று செயற்பட்டனர். தோட்டங்களுக்கு சென்று, வாக்குகளைக்கூட விலைபேசினர். வதந்திகளை பரப்பினார்கள். இதனால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது. பலர் வாக்களிப்பதற்குகூட செல்லவில்லை. எனமீது நம்பிக்கை இருந்ததால்தான் இரு தடவைகள் மக்கள் நாடாளுமன்றம் அனுப்பிவைத்தனர்.அதே நம்பிக்கை இன்றளவிலும் உள்ளது. ஆகவே மக்களுக்கான எனது குரல் தொடர்ந்து ஒலிக்கும்." என்றார்.

# முழுமனதுடன் ஒத்துழைப்பவர்களுடன் கட்சியை மீள கட்டியெழுப்புவேன்

## -இ.தொ.கா செயலாளர் ஜீவன் தொண்டமான்



"அரை மனதுடன் நூறு அங்கத்தவர்கள் இருப்பதைவிட, முழு மனதுடன் பத்து அங்கத்தவர்கள் என்னுடன் இருந்தால் நான் கட்சியை மீள உறுதியாக கட்டியெழுப்புவேன்" என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

உடபுஸ்ஸல்லாவ, கோணகலை மற்றும் ராகல ஆகிய கட்சிக் காரியாலயங்களுக்கு உட்பட்ட இ.தொ.காவின் மாவட்டத் தலைவர், தலைவி மற்றும் தோட்டக்கமிட்டி தலைவர், தலைவிமார்களுடனான சந்திப்பானது சனிக்கிழமை (23) இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது மக்கள் மத்தியில் உரையாடும்போதே இவ்வாறு கருத்து தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் காலங்களில் இ.தொ.கா இன் வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றிணைந்து எவ்வாறு செயற்படுவது, அதன் மூலமாக எவ்வாறான வெற்றியினை பெற்றுக்கொள்வது என்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இச் சந்திப்பில் இ.தொ.காவின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ், முன்னாள் நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து மக்கள் மத்தியில் ஜீவன் தொண்டமான் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் கட்சியில் மாற்றங்களை மேற்கொள்ள இருக்கின்றோம். இம் மாற்றங்களினூடாக தொடர்ந்து செயற்படத் தயார்நிலையில் இருக்கின்றோம். இதுவே காலத்தின் தேவைப்பாடும் ஆகும். நாடாளுமன்ற ஆசனத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற பாரிய நோக்கத்துடனே நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் யானை சின்னத்தைத் தேர்ந்தெடுத்தோம்.

கடந்த 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் மலையகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து கட்சிகளும் தனது மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. நாமும் இரண்டு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டோம். அது தற்போது ஒரு ஆசனம் ஆகியது. அதற்குக் காரணம் எமது ஆளுமை இன்மை அல்ல. சிலரின் சூழ்ச்சி ஆகும். இதை நாம் அனைவரும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

159 ஆசனங்களைப் பெற்று அரசாங்கத்தை அமைத்து "மலையகத்தை மாற்றுவோம்" என்று கூறியுள்ள ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# பேராதனை பல்கலையில் 36 ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு



பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் 36வது சர்வதேச ஆய்வு மாநாடு "உறுதியான உணவு முறைகளை நோக்கி துல்லியமான விவசாயம்" என்ற தொனிப்பொருளில் விவசாயபீட பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுர்ஜித், சிறப்பு அதிதியாக இலங்கைக்கான கனடா நாட்டின் தூதுவர் எரிக்வோல்ஸ்சும் கலந்துகொண்டனர்.(படங்கள்- கண்டி நிருபர்)

# பதுளை செங்கலடி பிரதான வீதியின் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது

(ராமு தனராஜா)

பதுளை செங்கலடி பிரதான வீதியில் பசறை 13 ம் கட்டை பகுதியில் பாரிய கற்பாறைகள் சரிந்து வீதியில் விழுந்தமையினால் தடைப்பட்டிருந்த போக்குவரத்து தற்போது சீர் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களின் துரித முயற்சியால் கற்பாறைகள் அகற்றப்பட்டு நேற்று குறித்த வீதியின் ஊடான போக்குவரத்து ஒற்றை வழி போக்குவரத்தாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. வீதி திறக்கப்பட்டாலும் காலநிலைக்கு ஏற்ப தேவை ஏற்படின் வீதியை மூடுவதற்கான சகல அதிகாரங்களும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தினமும் காலை 6 மணிக்குத் திறக்கப்பட்டு மாலை 6.00 மணிக்கு வீதி மூடப்படும் எனவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். இதேவேளை, இவ்வீதியின் ஊடாக பயணிக்கும் சாரதிகளும் பொதுமக்களும் மிகவும் அவதானமாக பயணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை பதுளை மாவட்ட அரசாங்க அதிபர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், பசறை பிரதேச செயலாளர், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து கலந்தாலோசித்த பின்னரே நேற்று இவ்வீதியைத் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.







பொகவந்தலாவ, கெர்கஸ்வோல்ட் இல. 02 பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வியாழக்கிழமை 21 ஆம் திகதி பாடசாலை அதிபர் அம்மாசி இராதாகிருஷ்ணன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வலய கல்வி பிரதிப் பணிப்பாளர், பிரதேச பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதன் போது சுமார் 232 மாணவர்கள் பரிசில்களும் பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

# இரு லொறிகள் நேருக்கு நேர் மோதி விபத்து



பதுளை – மஹியங்கனை வீதியில் கரமட்டிய பகுதியில் நேற்று (25) இரு லொறிகள் நேருக்கு நேர் மோதியதில் ஐவர் காயமடைந்துள்ளதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். கரமட்டிய ஆடைத்தொழிற்சாலைக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் காயமடைந்தவர்கள் மிகஹகிவுல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர் இரண்டு லொறிகளும் பலத்த சேதம் அடைந்துள்ளதாகத் தெரிவித்த கந்தகெட்டிய பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளை நிறுத்த வேண்டும்

## த.வெ.க தலைவர் விஜய்




ஐக்கிய நாடுகள் சபையினால் ஒவ்வொரு நவம்பர் மாதம் 25 ஆம் திகதியும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. அதன்படி நேற்று திங்கட்கிழமை பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம்.

இத் தினத்தில் தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதாகவும் அதனை ஒடுக்க வேண்டும் எனவும் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

“சர்வதேச ரீதியில் பெண்களின் முன்னேற்றம் முன்பைவிட நம்பிக்கை அளிப்பதாக இருந்தாலும் அவர்களுக்கான பாதுகாப்பு இன்னமும் கேள்விக் குறியாகவே இருக்கிறது.

பெண் விடுதலை குறித்து பேசும் தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துவிட்டன.

இதனைத் தடுக்க நீதித் துறையின் துணையுடன் ஆட்சியாளர்கள் இரும்புக் கரம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசு தனி இணையத்தளத்தை உருவாக்கி பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என பெண்களுக்ககு எதிரான வன்முறை கள் ஒழிப்பு சர்வதேச தினத்தில் வலியுறுத்து கிறேன்“ என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# “நாடாளுமன்றத்தை சீர்குலைக்க எதிர்க்கட்சிகள் சதி”- நரேந்திர மோடி

இந்தியாவின் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்று திங்கட்கிழமை ஆரம்பாகி அடுத்த மாதம் 20 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் 16 மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் கூட்டம் தொடங்கும் முன்பு இந்திய பிரதமர் நரேந்திர மோடி செய்தியாளர்களை சந்தித்துப் பேசியுள்ளார்.

அவர் கூறியதாவது,

“நாடாளுமன்றக் குளிர்கால கூட்டத்தொடர் இன்று (திங்கட்கிழமை) ஆரம்பாகிறது. இக் கூட்டத்தை ஆக்கப்பூர்வமாக நடத்துவதற்கு எதிர்க் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதிகாரப் பசியுடன் இருக்கும் கட்சியை வாக்காளர்கள் நிராகரித்துள்ளனர்.

அந்த விரக்தியில் நாடாளுமன்றத்தை சீர்குலைக்க சில கட்சிகள் முயற்சித்து வருகின்றன.

மக்கள் அவர்களை மீண்டும் மீண்டும் நிராகரிக்க வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புகளை சரி செய்ய எதிர் கட்சிகள் எப்பொழுதும் செயற்பட்டதில்லை.

அதுவும் காங்கிரஸ் மக்களுக்காக நாடாளுமன்றத்தில் உரையாற்றியதேயில்லை.

எதிர்க்கட்சிகள் இனிமேலாவது மக்களின் உணர்வுகளை மதித்து நாடாளுமன்றத்தின் மாண்புகளைப் பின்பற்ற வேண்டும். நாடாளுமன்றத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட வேண்டும்.



இருப்பினும் சில எதிர்க் கட்சிகள் பொறுப்புடன் செயல்பட்டு நாடாளுமன்ற வேலைகள் சுமுகமாக நடக்க வேண்டும் என விரும்புகிறார்கள்.

நாடாளுமன்றத்தின் நேரத்தை மாண்புடன் பயன்படுத்துவதில் இந்தியாவின் மரியாதை உள்ளடங்கியுள்ளது” இவ்வாறு கூறியுள்ளார்.

# கூகுள் உதவியுடன் சென்ற கார் விபத்தில் சிக்கி மூவர் உயிரிழப்பு

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம், பரேலியிலிருந்து படாவுன் மாவட்டத்திலுள்ள டேடாகஞ்ச் எனும் இடம் நோக்கி கார் ஒன்று சென்றுள்ளது.

குறித்த கார், கூகுள் மேப் உதவியுடன் சென்றுள்ளது.

குறித்த கார், மழை வெள்ளத்தில் இடிந்து கேட்பாரற்ற மேம்பாலத்தின் மீது சென்றுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக சுமார் 50 அடியில் இருந்து கீழே ஓடும் ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானது.

அதில் காரில் பயணம் செய்த மூன்று பேரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்ட பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.



கூகுள் மெப்பை நம்பி சென்றதால் இவ் விபத்து ஏற்பட்டது என உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளதோடு, பாலம் முழுமையடை யாமல் கிடப்பதால் வாகனங்களை எச்சரிக்கும் விதமாக அங்கு எந்தவொரு தடுப்பும் இல்லாததும் குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# மருத்துவமனையில் ஏற்பட்ட தீ பலி எண்ணிக்கை 17 ஆக உயர்வு



இந்தியாவின் உத்தரப் பிரதேசத்திலுள்ள மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் கடந்த 15 ஆம் திகதி இரவு குழந்தைகளுக்கான அவசர சிகிச்சை பிரிவில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

இதில் 10 குழந்தைகள் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்தனர்.

39 குழந்தைகள் மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட குழந்தைகளில் ஐவர் உடல் நலக் குறைவால் உயிரிழந்தனர்.

இந்நிலையில் சிகிச்சையில் இருந்த மேலும் இரண்டு குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர்.

இதனால் இத் தீ விபத்தில் பலியான குழந்தைகளின் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளன.

# சத்யராஜ்க்கு 'கலைஞர் விருது' முதல்வர் ஸ்டாலின் புகழாரம்




சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் முத்தமிழ் பேரவையின் பொன்விழா வெகு விமரிசையாக நடந்து முடிந்தது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதன்படி, நடிகர் சத்யராஜ்க்கு ஸ்டாலினால் “கலைஞர் விருது“ வழங்கி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இவ் விழாவில் பேசிய ஸ்டாலின்,

“நடிகர் சத்யராஜ்க்கு கலைஞர் விருது வழங்கி வைப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தகுதியானவருக்கு இவ் விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கலைஞரின் வசனத்தைப் பேசி நடித்தவர், பெரியாராகவே வாழ்ந்து காட்டியவர். ஆகவே அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சினிமாவில் இருந்துகொண்டே தனது திராவிட கொள்கைகளை துணிச்சலாக பேசக் கூடியவர் சத்யராஜ்.

அவருக்கு மீண்டும் மீண்டும் எனது பாராட்டுக்கள்” எனத் தெரிவித்துள்ளார்.

# குழந்தைகளிடையே அதிகரித்த நோய்கள்

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தொடங்கி ஒரு மாதம் கடந்த நிலையில் இன்னமும் அங்கு சீரான மழைப்பொழிவு இல்லை. அதிக வெப்பம், கடும் குளிர், மழை என அவ்வப்போது வானிலையில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. தன் காரணமாக கோடை காலத்து நோய்களான தட்டம்மை, மம்ஸ் போன்றவை அதிகமாக பரவி வருகின்றன.



அதேபோல் இன்னொருபுறம் சிக்கன்குனியா, டெங்கு உள்ளிட்டவையும் தீவிரமாக பரவி வருகின்றன.

இந்த ஆண்டில் மட்டும் சுமார் 21 ஆயிரத்துக்கும் அதிகமானோர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளன.

அதிலும் குறிப்பாக குழந்தைகளிடையே இப் பாதிப்பு அதிகரித்து வருகிறது.

இதுதொடர்பில் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவ நிபுணர் கூறுகையில்,

பருவ காலங்கள் மாறும்போது இன்புளுவென்ஸா, டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல்கள், டைஃபொய்ட், வயிற்றுப்போக்கு போன்ற பாதிப்புகளும் பரவலாக ஏற்படுகின்றன. அதன்படி, தற்போது குழந்தைகள், பாடசாலை செல்லும் மாணவர்களிடையே காய்ச்சல் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. பரிசோதனைகள் மேற்கொள்ளும்போது பத்தில் நான்கு பேருக்கு டெங்கு உறுதி செய்யப்படுகிறது. எனவே, இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் உடனடியாக மருத்துவர்களை அணுகி சிகிச்சை பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.கவில் இணைந்த நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள்



சீமான் தலைமை தாங்கும் நாம் தமிழர் கட்சியின் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் ராமச்சந்திரன் மற்றும் அக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் சிலர் அண்மையில் அக்கட்சியிலிருந்து விலகியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சுமார் 200 இற்கும் அதிகமான நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் அமைச்சர் செந்தில் பாலாஜி முன்னிலையில் தங்களை தி.மு.கவில் இணைத்துக் கொண்டனர்.

தி.மு.கவில் இணைந்தவர்களை பொன்னாடை அணிவித்து அமைச்சர் செந்தில்பாலாஜி கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து ராமச்சந்திரன் மற்றும் மற்ற நிர்வாகிகள் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது,

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு நாம் தமிழர் கட்சியிலிருந்து விலகிய நாங்கள் சரியான தலைமையின் கீழ் இயங்கும் கட்சியில் சேர நினைத்தோம்.

அதன்படி, சுமார் 25 வருடங்களுக்கும் அதிகமாக சரியான, வலுவான தலைமையிலுள்ள தி.மு.கவில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளோம்.

தமிழகத்தில் தற்சமயம் நேர்மறையான அரசியல் தேவைப்படுகிறது. அது தற்போது துணை முதலமைச்சராக இருக்கும் உதயநிதி ஸ்டாலினிடம் உள்ளது.

அவரது சிரித்த முகம் அனைவரையும் ஈர்க்கிறது.

அதன் காரணமாக நாங்களும் தி.மு.கவில் இணைந்துகொண்டோம்.

நாம் தமிழர் கட்சியில் இருக்கும் பலரும் அதிருப்தியுடன் தான் இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் எங்களுடன் பேசிக்கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களும் விரைவில் தி.மு.கவில் இணைந்து கொள்வார்கள்” இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

# காற்றின் வேகம் அதிகரிப்பு மீனவர்கள் கடலுக்கு செல்லத் தடை

தமிழகத்தில் நிலவி வரும் பருவ மழை காரணமாக கடலில் காற்றின் வேகம் அதிகரித்துள்ளது.



இதன் காரணமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்ல வேண்டாம் என மீன் வளத்துறை சார்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ் அறிவிப்பைத் தொடர்ந்து நாட்டுப் படகு மற்றும் விசைப்படகு மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்லவில்லை. இதன் காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் விசைப்படகுகள் கடற்கரை ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மீன்பிடியை நம்பி சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேநீருடன் பிஸ்கட் சேர்த்து உண்ட குழந்தை உயிரிழப்பு


இந்தியாவின் திருவள்ளூர் மாவட்டம், குருவராஜ கண்டிகை கிராமத்தில் வசிக்கும் அரிகிருஷ்ணன் – அமுலு தம்பதியின் 3 வயதான பெண் குழந்தை வெங்கடலட்சுமி.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை தேநீருடன் பிஸ்கட் சேர்த்து குழந்தைக்கு ஊட்டியுள்ளனர்.

அப்போது திடீரென குழந்தைக்கு புரையேறி மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர் குழந்தையை அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கனவே



இறந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குழந்தையின் உடல் பிரேத பரிசோதனைக்காக திருவள்ளூர் அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# காசா இனப்படுகொலையை விமர்சித்த பாலஸ்தீன குடிமக்களை துன்புறுத்தும் இஸ்ரேல்

உலக வலம் WORLD NEWS




காசாவில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக நடந்து வரும் இனப்படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கும் பாலஸ்தீன குடிமக்களை இஸ்ரேல் தடுத்து வைத்து சித்திரவதை செய்து வருவதாக தாய்லாந்து அறிக்கை தெரிவித்துள்ளது.

அசோசியேட்டட் பிரஸ் தயாரித்த அறிக்கையின்படி, அவர்கள் சிறையில் கடுமையான சித்திரவதைக்கு ஆளாக நேரிடும் என்று பலர் அஞ்சுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா தாக்குதல் தொடங்கியதில் இருந்து, 400க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் அரசு கொன்றுள்ளது. அவர்களில் பெரும்பாலோர் இஸ்ரேலில் சிறுபான்மையினருக்காக செயல்படும் பயங்கரவாதம் தொடர்பான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளனர்.

காசா படையெடுப்புடன் பாலஸ்தீன குடிமக்களுக்கு எதிரான கடந்த ஐந்து ஆண்டுகளாக வன்முறை வழக்குகள் அதிகம் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், தண்டனை தொடர்பில் நீதி அமைச்சகத்தில் தெளிவான புள்ளிவிவரங்கள் இல்லை.

சமூக ஊடகங்களில் ஒக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸ் தாக்குதலை அடுத்து, யூத எதிர்ப்புக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட பல பாலஸ்தீனிய குடிமக்கள் மீது பயங்கரவாத குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

போருக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்றதற்காக பலர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் படையெடுப்பிற்கு எதிராக இம்மாதம் ருகனாக் என்ற பெயரில் மாபெரும் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்குப் பிறகு நடந்த மிகப்பெரிய போராட்டங்களில் இதுவும் ஒன்று.

இதற்கு முன்பு நடந்த பாலஸ்தீனத்துக்கு ஆதரவான போராட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றுள்ளனர். ஆனால், இப்போது போருக்கு எதிராக கருத்து வெளியிட மக்கள் அஞ்சுகின்றனர் .

இதேவேளை, இஸ்ரேலின் மொத்த மக்கள் தொகையில் 20 மில்லியன் பாலஸ்தீனிய குடிமக்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உருகுவே ஜனாதிபதி தேர்தலில் இடதுசாரி வேட்பாளர் வெற்றி



தென் அமெரிக்க நாடான உருகுவேயில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இடதுசாரி எதிர்க்கட்சி வேட்பாளர் யமண்டு ஓர்சி வெற்றி பெற்றுள்ளார். கடுமையான போட்டிக்குப் பிறகு பழமைவாத ஆளும் கூட்டணியை யமண்டு ஓர்சி தோற்கடித்துள்ளார்.

இதன்படி, மத்திய-வலது ஆளும் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் அல்வாரோ டெல்கடோ, தனது தோல்வியை ஒப்புக்கொண்டார்.

தேர்தல் வெற்றியின் பின்னர் முன்னாள் வரலாற்று ஆசிரியரும், உருகுவேயின் பரந்த முன்னணி கூட்டணியில் சார்பில் இரண்டு முறை நகர முதல்வராக இருந்த ஓர்சி ஆதரவாளர்கள் முன்னிலையில் பேசியிருந்தார்.

"சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த நாடு மீண்டும் வெற்றி பெற்றுள்ளது என்றார். 3.4 மில்லியன் மக்கள் வாழும் நம் தேசம் இனிவரும் நாட்களில் ஒன்றுபடும்.

வெவ்வேறு உணர்வுகளைக் கொண்ட நம் நாடு இன்று வேறுவிதமான விதியைக் கொண்டுள்ளது என்பதையும் புரிந்து கொள்ளலாம். சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்து மக்களும் உதவ வேண்டும்" - என்றார்.

பெரும்பாலான வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர், டெல்கடோ 46 சதவீத வாக்குகளையும், ஓர்சி 49 சதவீத வாக்குகளை பெற்றுக்கொண்டதாக பெற்றதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீதமுள்ளவர்கள் உருகுவேயின் கட்டாய வாக்களிப்பை மீறி வெற்று வாக்குகளை அளித்தனர் அல்லது வாக்களிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கோவிட்-19 தொற்றுநோயைத் தொடர்ந்து பொருளாதார மந்தநிலையின் மீதான அதிருப்தியால் தூண்டப்பட்ட தேர்தலில் ஓர்சியின் வெற்றி முக்கியமானது என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

2024ஆம் ஆண்டில் நடந்த பல தேர்தல்களில் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா, தென் கொரியா மற்றும் ஜப்பான் வரையிலான நாடுகளில் ஆளும் கட்சிகளை அதிருப்தியடைந்த வாக்காளர்கள் தண்டித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இஸ்ரேலிய தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும்

## ஈரானின் உச்ச தலைவர் கோரிக்கை



இஸ்ரேலிய தலைவர்களுக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்க கூடாது எனவும் மாறாக மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் ஈரானின் உச்ச தலைவர் வலியுறுத்தியுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, முன்னாள் பாதுகாப்புத் தலைவரும் ஹமாஸ் தலைவருமான முகமது டெய்ஃப் ஆகியோருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதனிடையே, லெபனான் தலைநகரின் தெற்கு புறநகர் பகுதிகளான ஹரேட் ஹ்ரீக் பகுதியில் நேற்று திங்கட்கிழமை மதியம் இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள மக்களை கட்டாய வெளியேற்றத்திற்கு உத்தரவிட்ட இஸ்ரேல், குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற கட்டாயப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய விமானப்படை நடத்திய தாக்குதல்கள் தஹியேவில் உள்ள பல ஹிஸ்புல்லா கட்டளை மையங்கள் இலக்கு வைக்கப்பட்டிருந்ததாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஹிஸ் புல்லா அமைப்பினர் ஒரே நாளில் 250க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ஏவி கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் ஏழுப் பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது,

இஸ்ரேல் நாட்டின் ஆக்கிரமிப்பை எதிர்த்து கடந்த ஆண்டு ஒக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸ் அமைப்பினர் அந்நாட்டின் மீது அதிரடியாக தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதுடன், 200 பேர் வரை பிணைக்கை திகளாக பிடிக்கப்பட்டனர். எவ்வாறாயினும், 117 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

திடீர் தாக்குதலால் ஆத்திரம் அடைந்த இஸ்ரேல் கடந்த 13 மாதமாக பாலஸ்தீனிய நகரங்கள் மீது தாக்குதல் நடத்தி 44 ஆயிரம் பேரை கொலை செய்துள்ளது. இவர்களில் 70 சதவீதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஐக்கிய நாடுக்ள் சபை அறிக்கை தெரிவிக்கிறது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் ஓராண்டை கடந்துள்ளது. இதனிடையே, லெபனானில் செயல்படும் ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேல் மீது ஓராண்டுக்கு மேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையிலேயே, இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஹிஸ்புல்லா அமைப்பினர் ஒரே நாளில் 250க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ஏவி கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

# துருக்கியில் தரையிறங்கிய ரஷ்ய விமானம் தீப்பிடித்தது



துருக்கியில் தரையிறங்கிய ரஷ்ய விமானத்தில் திடீரென தீப்பிடித்துள்ளது. எனினும், பயணிகள் மற்றும் பணியாளர்கள் பாதுகாப்பாக விமானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதாக துருக்கி போக்குவரத்துத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குறித்த விமானம் 95 பேருடன் சென்ற துருக்கியின் தெற்குப் பகுதியில் உள்ள அந்தாலியா விமான நிலையத்தில் தரையிறங்கியது. இதன்போது விமானத்தின் இயந்திரத்தில் தீப்பிடித்தது.

சுகோய் சூப்பர்ஜெட் 100 வகையை சேர்ந்த அஜிமுத் ஏர்லைன்ஸ்க்கு சொந்தமான விமானம் சோச்சியில் இருந்து 89 பயணிகள் மற்றும் 6 பணியாளர்களுடன் சென்றபோது விபத்துக்குள்ளனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானம் தரையிறங்கியதும் விமானி அவசர அழைப்பு கொடுக்க விமான நிலைய மீட்புக்குழு, தீயணைப்புப்படை வீரர்கள் விரைவாக வந்து தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீ விபத்திற்கான காரணம் குறித்து உடனடியாக தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. இந்த விபத்து தொடர்ந்து ஓடுபாதையில் இருந்து விமானத்தை அப்புறுப்படுத்தும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இந்த சம்பவத்தை அடுத்து விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா வெளியிட்டுள்ள அதிர்ச்சி அறிக்கை

## நாள் ஒன்றுக்கு 140 பெண்கள் அல்லது சிறுமிகள் கொலை



உலகளவில், 2023ஆம் ஆண்டில், ஒரு நாளைக்கு சராசரியாக 140 பெண்கள் அல்லது சிறுமிகள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, பெண்களுக்கு மிகவும் ஆபத்தான இடமாக வீடு மாறியுள்ளது.

நேற்று திங்கட்கிழமை இரண்டு ஐ.நா முகமைகள் வெளியிட்ட அறிக்கையின்படி, பெண்கள் அவர்களது துணை அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொல்லப்பட்டனர்.

2023 ஆம் ஆண்டில் 85,000 பெண்கள் மற்றும் சிறுமிகள் ஆண்களால் வேண்டுமென்றே கொல்லப்பட்டுள்ளனர், இந்த இறப்புகளில் 60% (51,100) பாதிக்கப்பட்டவருக்கு நெருக்கமான ஒருவரால் செய்யப்பட்டதாக ஐநா பெண்களின் அறிக்கை கண்டறிந்துள்ளது.

இந்த எண்ணிக்கை 2022 இல் 48,800 ஆக காணப்பட்டுள்ளது.

உலகளவில், பெண் ஒருவர் இருப்பதற்கு மிகவும் ஆபத்தான இடம் அவரது வீடு காணப்படுவதாகவும், பெரும்பாலான பெண்கள் அங்குள்ள ஆண்களின் கைகளால் இறக்கிறார்கள் என்றும் அதன் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன என்று அமைப்பு கூறியது.

ஐ.நா பெண்கள் மற்றும் ஐ.நா போதைப்பொருள் மற்றும் குற்றப்பிரிவு அலுவலகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தன்று இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

பெண்கள் மற்றும் சிறுமிகள் எல்லா இடங்களிலும் பாலின அடிப்படையிலான வன்முறைக்கு ஆளாகின்றனர் என்றும் எந்த ஒரு பகுதியும் விடுபடவில்லை என்றும் அறிக்கையில் குறிப்பிடுகிறது.

2023ஆம் ஆண்டில் ஆபிரிக்காவில் 21,700 கொலைகளுடன், துணைகளால் அதிக எண்ணிக்கையிலான கொலை சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில், அமெரிக்காவில் 100,000க்கு 1.6 வீத பெண்களும் மற்றும் அவுஸ்திரேலியாவில் 100,000க்கு 1.5 வீத பெண்களும், ஆசியாவில் 100,000 பேருக்கு 0.8 வீத பெண்களும், ஐரோப்பாவில் 100,000 பேருக்கு 0.6 வீத பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெண்கள் பெரும்பாலும் நெருங்கிய துணைகளால் கொல்லப்படுகிறார்கள் என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த கொலைகளில் பெரும்பாலானவை வீடுகளில் இடம்பெற்றுள்ளதாக அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. உலகளவில், 2023ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்டவர்களில் 80 சதவீதம் பேர் ஆண்களாகவும், 20 சதவீதம் பேர் பெண்களாகவும் பதிவாகியுள்ளது.

பெண்கள் மற்றும் சிறுமிகள் கொல்லப்படுவதைத் தடுக்க பல்வேறு நாடுகளின் முயற்சிகள் இருந்தபோதிலும், அவர்களின் கொலைகள் அபாயகரமான அளவுகளில் இருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

சரியான நேரத்தில் மற்றும் பயனுள்ள தலையீடுகள் மூலம் கொலைகளைத் தடுக்க முடியும் என்றும் இரு முகமைகளும் வெளியிட்ட அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.




# "சொந்த மண்ணில் அவமானகர தோல்வி"

# ஆஸியை தோற்கடித்தது இந்தியா



அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான போர்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி 295 ஓட்டங்களால் அபார வெற்றியை பதிவு செய்துள்ளது. இதன் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் இந்தியா முன்னிலைப் பெற்றுள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்றுப் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா அணி தனது சொந்த மண்ணில் அவமானகரமான தோல்வியை சந்தித்திருந்த நிலையில், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்த வெற்றியை பதிவு செய்துள்ளது.

பெர்த்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் இந்திய அணியின் தலைவர் ரோகித் சர்மா இல்லாத நிலையில் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா அணியை வழிநடத்தியிருந்தார்.

இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் இந்திய வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியிருந்தது. முதல் இன்னிங்சில் இந்திய அணி 150 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தது.

எனினும், பந்து வீச்சில் அபாரமாக செயற்பட்டு அவுஸ்திரேலியா அணியை முதல் இன்னிங்சில் 104 ஓட்டங்களுக்கு சுருட்டியது. பும்ரா ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்ப விக்கெட்டுக்காக கே.எல்.ராகுல் மற்றும் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 201 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

முதல் விக்கெட் வீழ்த்தப்பட்ட பின்னர் விக்கெடடுகள் சரியத் தொடங்கியது. எனினும், விராட் கோலி மற்றும் ஜெய்ஸ்வால் நிதான துடுப்பாட்டத்தை கடைப்பிடித்தனர்.

இதில் ஜெய்ஸ்வால் 161 ஓட்டங்களை பெற்றிருந்த போது ஆட்டமிழந்தார். மறுபுறம் விராட் கோலி ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன, சர்வதேச அரங்கில் தனது 81வது சதத்தை பூர்த்தி செய்தார்.

இதன் மூலம் இந்திய அணி ஆறு விக்கெட்டுகளை இழந்து 467 ஓட்டங்களை பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டதுடன், ஆஸி அணிக்கு 534 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

போட்டியின் மூன்றாம் நாளில் தனது இரண்டாம் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, 12 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளை பறிகொடுத்திருந்தது.

இந்நிலையில், நான்காம் நாளான நேற்று 238 ஓட்டங்களை பெற்றிருந்த போது சகல விக்கெட்டுகளையும் இழந்து அவுஸ்திரேலியா தோல்வியை சந்தித்திருந்தது. இதன் மூலம் இந்தியா அணி 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தது.

இது அவுஸ்திரேலியா மண்ணில் இந்திய அணி அதி கூடிய ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெற்றுக்கொண்ட வெற்றியாகும். மேலும் இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ஜஸ்பிரித் பும்ரா தெரிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக செஸ் சம்பியன்ஷிப் ஆரம்பமானது



உலக செஸ் சம்பியன்ஷிப் தொடரின் இறுதி சுற்றுப் போட்டி சிங்கப்பூரில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்த தொடர் எதிர்வரும் 13ஆம் திகதிவரை இந்த தொடர் இடம்பெறவுள்ளது.

இதில் இந்தியாவைச் சேர்ந்த கிராண்ட்மாஸ்டரான டி.குகேஷ், நடப்பு உலக சம்பியனும், சீன வீரருமான டிங் லிரெனை எதிர்கொண்டு விளையாடவுள்ளார்.

இந்தப் போட்டி சிங்கப்பூரின் ரெசார்ட்ஸ் வேர்ல்ட் சென்டோவில் அமைந்துள்ள ஈக்வரியல் நட்சத்திர ஹோட்டலில் நடைபெற உள்ளது.

உலக கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் பட்டம் வென்றதன் மூலமாக குகேஷ் உலக செஸ் போட்டியில் விளையாடுவதற்கு தகுதி பெற்றிருந்தார்.

இந்தப் போட்டியில் உலக சம்பியன் லிரெனுடன் மோதும், 18 வயதான தமிழக வீரரான குகேஷ் மீது அதிக எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இதில் குகேஷ் வெற்றி பெற்றால், மிக இளம் வயதில் உலக செஸ் பட்டம் வென்ற வீரர் என்ற சாதனையை படைப்பார்.

கடந்த 2023ஆம் ஆண்டில் ரஷ்ய வீரர் இயான் நெபோம்னியாச்சியை வீழ்த்தி உலக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார் டிங் லிரேன். சீன நாட்டைச் சேர்ந்த முதல் உலக செஸ் சம்பியன் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், கடந்த ஒன்பது மாதங்களாக தனிப்பட்ட காரணங்களால் லிரேன் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தொடர் 14 சுற்றுகளை கொண்டதாக அமைந்துள்ளது.

இதில் ஒரு சுற்றில் வெற்றி பெறுபவருக்கு ஒரு புள்ளி கிடைக்கும். போட்டி டிராவில் முடிந்தால் அரைப்புள்ளி மட்டுமே கிடைக்கும். எந்த வீரர் முதலில் 7.5 புள்ளிகளை பெறுகிறாரோ, அவர்கள் சம்பியன் பட்டத்தை வென்றதாக அறிவிக்கப்படுவார்.

ஒருவேளை 14 போட்டிகளுமே டிராவில் முடிவடைந்து, இருவருமே தலா 7 புள்ளிகளைப் பெற்றிருந்தால், வெற்றியாளரைத் தீர்மானிக்க டை- பிரேக் முறை கடைபிடிக்கப்படும். இந்த போட்டிகள் அனைத்துமே இலங்கை நேரப்படி மதியம் 2.30 மணிக்கு தொடங்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இங்கிலீஷ் பிரீமியர் லீக்



# சாலாவின் இரட்டை கோல் உதவியுடன் லிவர்பூல் வெற்றி

இங்கிலீஷ் பிரீமியர் லீக் தொடரில் லிவர்பூல் அணி, சவுத்தாம்ப்டன் அணியை வீழ்த்தி வெற்றிபெற்றுள்ளதுடன், புள்ளிப்பட்டியலில் தொடர்ந்தும் முன்னிலைப் பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் அணி அபார வெற்றியை பதிவு செய்ததுடன், அந்த அணியில் நட்சத்திர வீரர் மொஹமட் சாலா இரண்டு கோல்களை அடித்திருந்தார்.

அவர் 65 மற்றும் 83வது நிமிடங்களில் கோல் அடித்திருந்தார்.

இந்த வெற்றி மூலம் புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள மான்செஸ்டர் சிட்டியுடன் புள்ளி இடைவெளியை, லிவர்பூல் அணி எட்டாக அதிகரித்துக்கொண்டுள்ளது.

போட்டியில் முதல்பாதி ஆட்டத்தில் 30வது நிமிடத்தில் லிவர்பூல் அணியின் டொமினிக் சோபோஸ்லாய் முதல் கோல் அடிக்க, பதிலுக்கு 42வது நிமிடத்தில் சவுத்தாம்ப்டன் அணியின் வீரர் ஆடம் ஆம்ஸ்ட்ராங் கோல் அடித்திருந்தார்.

இதனால் முதல் பாதி 1-1 என சமநிலையில் முடிய, இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்து 56வது நிமிடத்தில் சவுத்தாம்ப்டன் அணியின் மேடியஸ் பெர்னாண்டஸ் கோல் அடித்தார்.

இதனால் 2-1 என்ற கோல் கணக்கில் சவுத்தாம்ப்டன் அணி முன்னிலைப் பெற்றது. எனினும், போட்டியின் 65 மற்றும் 83வது நிமிடங்களில் லிவர்பூல் அணி சார்பில் சாலா கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதிசெய்தார்.

இதன் மூலம் லிவர்பூல் அணி 12 ஆட்டங்களில் 31 புள்ளிகளுடன் பட்டியலில் முன்னேறியது. மான்செஸ்டர் சிட்டி 23 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

செல்சி, ஆர்சனல், பிரைட்டன் ஆகிய அணிகள் தலா 22 புள்ளிகளுடன் அடுத்த நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதல் ஒருநாள் போட்டியில் சிம்பாப்வேயிடம் மண்டியிட்டது பாகிஸ்தான்



சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றுப் போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் சிக்கந்தர் ராசாவின் சகலதுறை அசத்தலால் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 80 ஓட்டங்களால் இலகு வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகின்றது. இதன் முதல் போட்டி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றிருந்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பை தேர்வு செய்திருந்தது. இப்போட்டியில் பாகிஸ்தான் அணி சார்பில் மூன்று வீரர்கள் தங்கள் ஒருநாள் சர்வதேச அறிமுகத்தினைப் பெற்றிருந்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடக் களம் நுழைந்த சிம்பாப்வே அணி ஒரு கட்டத்தில் 120 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து பறிதவித்தது. இருப்பினும் சிக்கந்தர் ராசா பொறுப்புடன் ஆடி 39 ஓட்டங்களையும், நக்ராவா 48 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 40.2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது சிம்பாப்வே அணி.

பந்துவீச்சில் அறிமுக வீரரான பைஸால் மூன்று விக்கெட்டுகள்களையும், பைசல் அக்ரம் மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பின்னர் 206 என்ற எட்டக்கூடிய வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது.

இதனால் 21 ஓவர்களில் முதல் ஆறு விக்கெட்டுக்களையும் வெறும் 60 ஓட்டங்களுக்கு இழந்து தவிர்த்திருக்க மழை குறுக்கிட்டது. இதனால் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி சிம்பாப்வே அணி 80 ஓட்டங்களால் இலகு வெற்றியைப் பதிவு செய்தது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவரான முஹம்மது ரிஸ்வான் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சிக்கந்தர் ராசா மற்றும் முஷாரபானி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

# ஐபிஎல் மெகா ஏலம்

# 2ம் நாள்

2025 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஐபிஎல் தொடருக்கான மெகா ஏலம் இரண்டாம் நாளாக நேற்று திங்கட்கிழமை சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் பிற்பகல் 3.30க்கு ஆரம்பமாகி இடம்பெற்றிருந்தது. ஞாயிற்றுக்கிழமை நடந்த ஏலத்தின் முதல் நாளில் முடிவில் 467.95 கோடி இந்திய ரூபாய் செலவில் 72 வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இதன்போது ரிஷப் பந்த், கே.எல்.ராகுல், ஸ்ரேயாஸ் ஐயர், வெங்கடேஷ் ஐயர் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் ஏலத்தில் வாங்கப்பட்டிருந்தனர்.

மேலும், ஐபிஎல் வரலாற்றில் மிக கூடிய தொகைக்கு (27 கோடி ரூபாய்) ரிஷப் பந்த் ஏலத்தில் லக்னோ அணியால் வாங்கப்பட்டிருந்தார். ஷ்ரேயாஸ் ஐயர் 26.75 ரூபாய்க்கும், வெங்கடேஷ் ஐயர் 23.75 கோடி ரூபாவிற்கும் ஏலத்தில் வாங்கப்பட்டனர்.






நேற்று இடம்பெற்றிருந்த ஏலத்தின் போது கடந்த காலங்களில் ஐபிஎல் தொடர்களில் பிரகாசித்திருந்த முக்கிய வீரர்கள் முதல் சுற்றில் எந்த அணியாலும் வாக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக, கேன் வில்லியம்சன், ஷர்துல் தாகூர், பிரித்வி ஷா, டேரல் மிச்சல், ரஹானே உள்ளிட்ட முன்னணி வீரர்கள் முதல் சுற்றில் ஏலம் போயிருக்கவில்லை.

எனினும், தென்னாப்பிரிக்காவின் பாப் டு பிளெசிஸ் இரண்டு கோடிக்கு டெல்லி அணியால் வாங்கப்பட்டிருந்தார். அதேபோல் வாஷிங்டன் சுந்தரை குஜராத் டைட்டன்ஸ் அணி 3.2 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது.

மற்றுமொரு தென்னாப்பிரிக்க வீரர் மார்கோ யான்செனை ஏழு கோடிக்கு ஏலத்தில் பஞ்சாப் அணி வாங்கியது. அதேபோல் இங்கிலாந்து அணியில் சாம் கர்ரனை 2.4 கோடிக்கு சென்னை அணி வாங்கியிருந்தது.

இந்த பதிவானது மாலை நான்கு மணி வரை நடந்த ஏலத்தின் முடிவுகளாகும்.

### முதல் நாளில் ஒவ்வொரு அணிகளும் வாங்கிய வீரர்களின் விபரங்கள்

**மும்பை இந்தியன்ஸ்**

டிரென்ட் போல்ட், நமன் திர், ரொபின் மின்ஸ், கரண் ஷர்மா

**பஞ்சாப் கிங்ஸ்**

ஷ்ரேயாஸ் ஐயர், யுஸ்வேந்திர சாஹல், அர்ஷ்தீப் சிங், மார்கஸ் ஸ்டோனிஸ், கிளென் மேக்ஸ்வெல், ஷஷாங்க் சிங், விஜய்குமார் வைஷாக், யாஷ் தாக்கூர்

**ராஜஸ்தான் ரோயல்ஸ்**

ஜோஃப்ரா ஆர்ச்சர், வனிந்து ஹசரங்கா, மகேஷ் தீக்ஷனா, ஆகாஷ் மத்வால், குமார் கார்த்திகேய சிங்

**ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு**

ஜோஷ் ஹேசில்வுட், பில் சால்ட், ஜிதேஷ் சர்மா, லியாம் லிவிங்ஸ்டோன், ரசிக் தார், சுயாஷ் சர்மா

**சன்ரைசர்ஸ் ஹைதராபாத்**

இஷான் கிஷன், முகமது ஷமி, ஹர்ஷல் படேல், ராகுல் சாஹர், எடம் ஜம்பா, அதர்வா டைடே, அபினவ் மனோகர், சிமர்ஜீத் சிங்

**சென்னை சூப்பர் கிங்ஸ்**

நூர் அகமது, ரவிச்சந்திரன் அஷ்வின், டெவோன் கான்வே, சையத் கலீல் அகமது, ரச்சின் ரவீந்திரா, ராகுல் திரிபாதி, விஜய் சங்கர்

**டெல்லி கேப்பிடல்ஸ்**

கேஎல் ராகுல், ஹாரி புரூக், ஜேக் ஃப்ரேசர்-மெக்குர்க், கருண் நாயர், டி நடராஜன், மிட்செல் ஸ்டார்க், சமீர் ரிஸ்வி, அசுதோஷ் சர்மா, மோகித் சர்மா

**குஜராத் டைட்டன்ஸ்**

ஜோஸ் பட்லர், ககிசோ ரபாடா, முகமது சிராஜ், பிரசித் கிருஷ்ணா, நிஷாந்த் சிந்து, மஹிபால் லோம்ரோர், குமார் குஷாக்ரா, அனுஜ் ராவத், மனவ் சுதர்

**லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ்**

ரிஷப் பந்த், டேவிட் மில்லர், ஐடன் மார்க்ரம், மிட்செல் மார்ஷ், அவேஷ் கான், மயங்க் யாதவ், அப்துல் சமத், ஆர்யன் ஜுயல்

**கொல்கத்தா நைட் ரைடர்ஸ்**

குயின்டன் டி காக், ரஹ்மானுல்லா குர்பாஸ், ஆங்கிரிஷ் ரகுவன்ஷி, வெங்கடேஷ் ஐயர், அன்ரிச் நார்ட்ஜே, வைபவ் அரோரா, மயங்க் மார்கண்டே.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 நவம்பர் 26ம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.